வடக்கின் முதல் நாளிதழ் – Estd 1959 Reg. No. : P. 1632 விலை ரூ. 30/=

# ஈழநாடு
Eelanadu

மாருதி Money Exchange (Pvt) Ltd.
இல.390, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
T.P: 021 221 4433
076 284 4443
இல.285, காலி வீதி, வெள்ளவத்தை, கொழும்பு 06
T.P: 011 236 2086
இவ் அனைத்து சேவைகளையும் இங்கு பெற்றுக் கொள்ளலாம்.
MoneyGram மணிகிராம் பணப்பரிமாற்றம்
Ria ரியா பணப்பரிமாற்றம்
WESTERN UNION வெஸ்ரேன் யூனியன் பணப்பரிவர்த்தனை

Email : news@eelanadu.lk மலர் : 04 14.08.2023 திங்கட்கிழமை இதழ் : 247 பக்கங்கள் : 16

### விகாரைகளை தடுக்க முயன்றால்
## தமிழர்களின் தலைகளை களனிக்கு சுமந்து வருவேன்!
### மேர்வின் சில்வா சொல்கிறார்



கொழும்பு, ஓக. 14

“நான் வடக்கு, கிழக்குக்கு வருவேன். நீங்கள் (வடக்கு, கிழக்கில் உள்ளவர்கள்) விகாரைகளைத் தடுக்க முற்பட்டால், மகா சங்கத்தினர் மீது கை வைக்க முயன்றால் நான் களனிக்கு சும்மா திரும்பி வரமாட்டேன். உங்களின் தலைகளைக் கையில் சுமந்து கொண்டுதான் களனிக்கு வருவேன்.”

- இவ்வாறு முன்னாள் அமைச்சர் மேர்வின் சில்வா தெரிவித்துள்ளார்.

நேற்று ஞாயிற்றுக் கிழமை தென்னிலங்கையின் சிங்கள

15

### இலங்கை செல்வோருக்கு ஆஸி. எச்சரிக்கை

சிட்னி, ஓக. 14

அவுஸ்திரேலியா இலங்கைக்கான பயண ஆலோசனைகளை மீளாய்வு செய்துள்ளது. அதில், இலங்கை செல்பவர்கள் பொது ஆர்ப்பாட்டங்கள் காரணமாக அதிக எச்சரிக்கையுடன் இருக்க வேண்டும் என்ற விடயத்தை வலியுறுத்தியுள்ளது.

“இலங்கைக்கான எங்கள்

15



## சாவகச்சேரியில் விபத்து; மாணவன் பரிதாபப் பலி!

தென்மராட்சி, ஓக. 14

லொறியும் அதிவேகமாக பயணித்த மோட்டார் சைக்கிளும் நேருக்கு நேர் மோதிய விபத்தில் பாடசாலை மாணவன் ஒருவர் உயிரிழந்தார்.

தென்மராட்சி - சாவகச்சேரி - நுணாவில் பகுதியில் இடம்பெற்ற இந்த விபத்தில் சிவபாலன் பிரவீன் (வயது 19) என்பவரே உயிரிழந்தார். சாவகச் சேரி, கண்டுவில் வீதியை சேர்ந்த இவர் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியில்

15

# தமிழர் மரபுரிமைகளை காக்க ஒரே கட்டமைப்பாக எழுவோம்
### அகத்தியர் சுவாமிகள் அழைப்பு



கொழும்பு, ஓகஸ்ட் 14

**தமிழர் மரபுரிமைகளை பாதுகாக்க ஒருங்கிணைந்த கட்டமைப்பாக எழுவோம் என்று ஒருங்கிணைந்த தமிழர் கட்டமைப்பு அழைப்பு விடுத்துள்ளது.**

அத்துடன், வடக்கு, கிழக்கு தமிழரின் தலைகளை களனிக்கு கொண்டு வருவேன் என பகிரங்கமாக கூறும் அளவுக்கு வந்துள்ள அரசியல்வாதிகளை கைது செய்வதுடன், தமிழரின் வழிபாட்டுத்தலங்கள் தொடர்பாக மிக மோசமான கருத்துகளை வெளியிடுவோருக்கு எதிராகவும் அரசு உடன் நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என்று வலியுறுத்தப்பட்டுள்ளது.

அந்த அமைப்பின் அமைப்பாளர் தவத்திரு அகத்தியர் அடிகளார் நேற்று விடுத்த அறிக்கையிலேயே மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டவை வருமாறு,

இன்று எம் தாயகமான வடக்கு, கிழக்கின் அனைத்து பிரதேசங்களிலும் மிக

15

## வாகன இறக்குமதி தடையில் தளர்வு!
### இந்த வாரத்தில் நடைமுறை

கொழும்பு, ஓக. 14

தெரிவு செய்யப்பட்ட வாகனங்களுக்கான இறக்குமதி கட்டுப்பாடு இந்த வாரத்துக்குள் தளர்த்தப்படும் என்று நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய தெரிவித்துள்ளார்.

பொருளாதார நெருக்கடி காரணமாக வாகன இறக்குமதி நிறுத்தப்பட்டது. இந்த நிலையிலேயே பொதுப் போக்குவரத்து சேவைகள் மற்றும் பொருட்கள் போக்குவரத்து சேவைகளுக்காக பயன்படுத்தப்படும் தெரிவுசெய்யப்பட்ட வாகனங்களுக்கான இறக்குமதி கட்டுப்பாட்டைத் தளர்த்த தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இதற்கான வர்த்தமானி அறிவிப்பு இந்த வாரத்துக்குள் வெளியிடப்படும் எனவும் அமைச்சர் தெரிவித்தார். (ஐ)

### வடக்கில் மிதிவெடி அகற்ற நிதி!

கொழும்பு, ஓக. 14

வடக்கு மாகாணத்தில் மிதிவெடிகள் - கண்ணிவெடிகளை அகற்றும் பணிகளை விரைவுபடுத்த நிதியுதவி வழங்க ஜப்பான் அரசாங்கம் இணங்கி

15

## கல்வியங்காட்டில் ஒருவர் கொலை சிறுமி துஷ்பிரயோகமே காரணம்?
### எண்மர் பொலிஸாரின் பிடியில்

யாழ்ப்பாணம், ஓக. 14

கல்வியங்காட்டில் நேற்று முன்தினம் இடம்பெற்ற கொலையின் பின்னணியில் 8 வயது சிறுமி ஒருவர் துஷ்பிரயோகம் செய்யப்பட்டமையே காரணம் என்று கூறப்படுகின்றது.

இந்தக் கொலை சம்பவம் தொடர்பில் 8 பேர் பொலிஸாரால் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். இதில் இரு பெண்களும் அடக்கம். அத்துடன், பாதிக்கப்பட்டார் என்று கூறப்படும் சிறுமியும் பொலிஸ் நிலையத்தில் தாயாருடன் தங்க வைக்கப்பட்டுள்ளார் என்று அறிய வருகின்றது.

கொலையான நபர் கடத்தப்பட்டு இரண்டு நாட்கள் சித்திரவதைகள் செய்யப்பட்டார் என்று

15

## இந்தியாவுக்கான தூதுவராக சேனுகா திரேனி செனவிரத்ன!

கொழும்பு, ஓக. 14

இந்தியாவுக்கான இலங்கையின் புதிய உயர்ஸ்தானிகராக சேனுகா திரேனி செனவிரத்ன நியமிக்கப்படவுள்ளார்.

இந்தியாவுக்கான தற்போதைய இலங்கையின் தூதுவர் மிலிந்த மொறகொடவின் பதவிக் காலம் எதிர்வரும் செப்ரெம்பர் மாதத்துடன் நிறைவடைகிறது.

இதன் பின்னர், சேனுகா இந்தியாவுக்கான உயர்ஸ் தானிகராக பதவியேற்கவுள்ளார்.



சேனுகா செனவிரத்ன தற்போது ஜனாதிபதி செயலகத்தில் வெளிநாட்டு உடைகப் பணிப்பாளர் நாயகமாக பணியாற்றுகிறார்.

முன்னதாக அவர் வெளிவிவகார

15

## 13ஐ வைத்து மாயை காட்டுகிறார் ரணில்!
### சிறீதரன் எம். பி. விசனம்

கொழும்பு, ஓக. 14

ரணில் விக்கிரமசிங்க தொடர்ந்தும் தான் ஜனாதிபதியாக வருவதற்கு 13ஆம் திருத்தச்சட்டத்தை கொண்டு வருவதாக ஒரு மாய தோற்றத்தை ஏற்படுத்துகின்றார் அவர் அரசியல் தீர்வையும் பெற்றுத் தரமாட்டார் என நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறிதரன் தெரிவித்துள்ளார்.

இலங்கை தமிழரசு கட்சியின் இளைஞர் அணியின்

15

## 10ஆம் தரத்திலேயே இனி ஓ. எல். பரீட்சை!
### கல்வி அமைச்சு ஆராய்கிறது

கொழும்பு, ஓக. 14

கல்வி பொதுத் தராதர சாதாரண தரப் பரீட்சையை எதிர்காலத்தில் 10ஆம் தரத்தில் நடத்துவது தொடர்பில் ஆராயப்படவுள்ளதாக கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று நடைபெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டு கருத்துரைத்த

15

உண்மைகள் புனிதமானவை; கருத்துக்கள் சுதந்திரமானவை

# இப்படியும் நடக்கிறது

அந்த நகரத்தில் அவர் ஒரு பிரபல்யமான நபர். நகரத்தில் உள்ளவர்கள் மதிக்கின்ற மனிதர். சந்தை கூடும் இடத்தில் ஓர் உயர்ந்த இடத்தில் அவர் நின்று கொண்டார்.

மக்கள் சந்தையை நோக்கிப் போய்க் கொண்டும் வந்து கொண்டும் இருந்தனர்.

'அன்பார்ந்த நண்பர்களே? உங்களுக்கு உங்கள் வாழ்க்கைக்கு ஏற்ற அருமையான சில யோசனைகள் என்னிடம் இருக்கின்றன. இவற்றை காது கொடுத்துக் கேட்க வேண்டும் என்று நினைப்பவர்கள் அருள் கூர்ந்து சற்று நில்லுங்கள் ' என்று அவர் உரத்த குரலில் கூறினார். அவர் என்ன சொல்லப் போகிறார் என்று அறிந்து கொள்வதற்காக ஒரு பெருங்கூட்டம் அங்கே கூடிற்று.

'நண்பர்களே! கொஞ்சங்கூட உடல் உழைக்காமல் வீட்டில் இருந்தவாறே ஆயிரக்கணக்கில் சம்பாதித்து சுகபோக வாழ்வு வாழ உங்களில் எத்தனை பேருக்கு விருப்பம்? நான் அதற்கு வழி சொல்லுகிறேன் என்னுடைய யோசனைகளைக் கேட்கத் தயாராக இருப்பவர்கள் எத்தனை பேர்? அவர்கள் மட்டும் கைதூக்குங்கள்' என்றார்.

அநேகமாக அங்கே இருந்த அத்தனை பேரும் கை தூக்கினார்கள்.

அவர் தாம் நின்றிருந்த இடத்தை விட்டுக் கீழிறங்கி நடக்கத் தொடங்கினார்.

'என்ன ஒன்றும் சொல்லாமல் செல்லுகிறீர்களே?' என்று மக்கள் கேட்டனர்.

'நண்பர்களே நமது ஊரிலே எத்தனை சோம்பேறிகள் இருக்கிறார்கள் என்று தெரிந்து கொள்ள விரும்பினேன் என்னையும் சேர்த்து இந்த ஊரில் உள்ள எல்லோருமே சோம்பேறிகள் தான் என்ற உண்மை எனக்கு விளங்கி விட்டது. இனி எனக்கு இங்கே என்ன வேலை? போய் வருகிறேன்' என்று கூறியவாறே நடக்கத் தொடங்கினார்.

தெற்கு ஊடகங்களில் இப்போது அதிகம் பேசப்படுவது, ஒரு தமிழர் அரச தொலைக்காட்சி ஒன்றை வாடகைக்கு எடுத்த விவகாரம்தான்.

அரச தொலைக்காட்சியான ரூபவாஹினி தொலைக்காட்சி நிறுவனம் தனது அலைவரிசை ஒன்றை தமிழர் ஒருவருக்கு சொந்தமான நிறுவனத்துக்கு சில மாதங்களுக்கு குத்தகைக்கு வழங்கியிருக்கின்றது. அதனைப் பார்த்துவிட்டு சிங்கள ஊடகங்களும் சில தெற்கு பத்தி எழுத்தாளர்களும் அதுபற்றியே எழுதிக் கொண்டிருக்கின்றனர்.

ஈழத்தமிழரான லைக்கா சுபாஸ்கரன் தமிழகத்தில் சினிமா துறையில் கால்பதித்தபோது அவருக்கு எதிராக திரையுலகம் பல்வேறு நெருக்கடிகளைக் கொடுத்தபோதிலும் அவற்றையெல்லாம் தாண்டி இன்று தமிழ் திரையுலகில் அசைக்க முடியாத நபராக மாறியிருக்கிறார்.

இதேபோல அவர் இலங்கையில் மிகப்பழைய ஊடகநிறுவனமான சுவர்ணவாஹினி நிறுவனத்தை வாங்கியபோது இலங்கையிலும் குறிப்பாக, தெற்கில் இனவாத சக்திகள் அவருக்கு எதிராக சேறடிப்புகளை செய்தன. அவற்றையும் தாண்டி இன்று ஊடகத்துறையில் மாத்திரமின்றி கிரிக்கெட்டில் எல். பி. எல்லின் யாழ்ப்பாண குழுவைதன தாக்கியதுடன், பல்வேறு நிறுவனங்களிலும் முதலிட்டு வருகின்றார்.

நடப்பு எல். பி. எல். போட்டிகளின் தொலைக்காட்சி ஒளிபரப்பு உரிமத்தை பெற்றுள்ள அவரது சுவர்ணவாஹினி நிறுவனம் தமது புதிய தொலைக்கட்சி ஒன்றில் அந்த போட்டிகளை ஒளிபரப்பி வருகின்றது. அதற்காக தனியான அலைவரிசை இல்லை என்பதால், தற்போது ரூபவாஹினியின் அலைவரிசை ஒன்றை ஆறு மாதங்களுக்கு குத்தகைக்கு பெற்று அதன் ஊடாக எல். பி. எல். போட்டிகளை ஒளிபரப்பி வருகின்றார்கள். அரசுக்கும் கிரிக்கெட் சபைக்கும் இந்தப் போட்டிகளை மக்கள் பார்க்க வேண்டும் என்பதும் முக்கியமானதுதானே.

நாம் சொல்ல வருவது அதுவல்ல.

அதற்காக அவர்கள் ரூபவாஹினிக்கு வழங்கியுள்ள தொகை, நட்டத்தில் அடுத்தநாள் செலவுக்கு என்னசெய்வது என்று விழித்துக்கொண்டிருந்த ரூபவாஹினி நிறுவனத்துக்கு 'குளுக்கோஸ்' கொடுத்திருக்கின்றது.

அன்று நாடு பொருளாதார நெருக்கடியில் சிக்கியிருந்த போது தமிழர் தரப்பில் பலரும் இனப்பிரச்னைக்கு தீர்வு காணப்பட்டிருந்தால் இந்த நிலைமை வந்திருக்காது என்று கூறிய போது யாரும் கண்டுகொள்ளவில்லை.

ஆனால், புலம்பெயர் தமிழர்களை நாட்டில் முதலிடுமாறு கோட்டாபயவிலிருந்து அனைவருமே கோரிக்கை விடுத்த வண்ணம் இருந்தனர்.

இன்று சேடம் இழுத்துக் கொண்டிருந்த ரூபாவாஹினிக்கு ஒரு புலம்பெயர் தமிழர் உயிர் கொடுத்திருப்பதுபோல அன்று சரியான முறையில் தமிழர் பிரச்னையை அணுகியிருந்தால் பொருளாதார நெருக்கடிக்கும் தீர்வு கண்டிருக்கலாம்.

இனியாவது சம்பந்தப்பட்டவர்கள் புரிந்து கொண்டால் சரி.

மேலே சோம்பேறிகளை வெட்கப்பட வைப்பதன் மூலம் திருத்துவதற்கு அந்த நகரத் தலைவர் கையாண்டது போல, எடுத்ததற்கெல்லாம் இனவாதம் பேசுவோரை வெட்கப்பட வைத்து திருத்துவதற்கு தெற்கில் ஒருவர் எப்போது வருவாரோ?.

- ஊர்க்குருவி.

# கேளிக்கை நிகழ்வுகளுக்கான உரிமக் கட்டணம் அதிகரிப்பு!

கொழும்பு, ஓக. 14

திரைப்படங்கள் (உள்ளூர், வெளிநாட்டு), மேடை நாடகங்கள், இசை நிகழ்ச்சிகள் போன்ற பொது கண்காட்சிகளுக்கான உரிமக் கட்டணம் வெகுஜன ஊடக அமைச்சால் வெளியிடப்பட்ட அதிவிசேட வர்த்தமானி மூலம் திருத்தப்பட்டுள்ளது.

இதன்படி வெளிநாட்டு திரைப்படங்களுக்கான உரிமக் கட்டணம் 20 ஆயிரம் ரூபாயிலிருந்து ரூ. 40 ஆயிரம் ரூபாய் வரை அதிகரிக்கப்பட்டுள்ளது. உள்ளூர் திரைப்படங்களுக்கான கட்டணம் 10 ஆயிரம் ரூபாயிலிருந்து 15 ஆயிரம் ரூபாய் வரை அதிகரிக்கப் பட்டுள்ளது.

இசை மற்றும் நிகழ்ச்சிகளுக்கான உரிமக் கட்டணம், உள்ளூர் கலைஞர்களின் பங்கேற்புடன் திறந்தவெளி நிகழ்ச்சிகள் - 3 ஆயிரத்து 750 ரூபாய், உள்ளூர் கலைஞர்களின் பங்கேற்புடன் ஒரு மண்டபத்தில் நடைபெறும் நிகழ்ச்சிகள் 3 ஆயிரம் ரூபாய், வெளிநாட்டு கலைஞர்கள் பங்கேற்கும் திறந்த வெளி நிகழ்ச்சிகள் 37 ஆயிரம் 500 ரூபாய்.

வெளிநாட்டு கலைஞர்களின் பங்கேற்புடன் ஒரு மண்டபத்தில் நடைபெறும் நிகழ்ச்சிகள் - 22 ஆயிரம் 500 ரூபாய், தொலைக்காட்சி சேவைகளால் நேரடியாக ஏற்பாடு செய்யப்பட்ட மேடை நிகழ்ச்சிகள் மற்றும் நிகழ்ச்சிகள் 37 ஆயிரம் 500 ரூபாய்.

இதேவேளை, நீண்டகால மற்றும் குறுகியகால மேடை நாடகங்களுக்கான உரிமக் கட்டணம் குறைக்கப்பட்டுள்ளது. இதன்படி 500 ரூபாயிலிருந்து 250 ரூபாயாகக் குறைக்கப்பட்டுள்ளது. முன்பள்ளி நிகழ்ச்சிகளுக்கான உரிமக் கட்டணமாக 2,000 ரூபாய் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. (ஐ)

# முகநூல் காதலர்களை சந்திப்பதற்காக வந்த சிறுமிகள் பொலிஸில் சிக்கினர்!

கொழும்பு, ஓக. 14

முகநூல் மூலம் அறிமுகமான காதலர்களை சந்திப்பதற்காக பாடசாலை செல்வதாக பெற்றோரிடம் கூறி விட்டு வீட்டை விட்டு வெளியேறி குருநாகல் நகருக்கு வந்த 16 வயது சிறுமிகள் இருவரை பிடித்த பொலிஸார் அவர்களை பெற்றோரிடம் ஒப்படைத்துள்ளனர்.

குருநாகல் தலைமையக பொலிஸ் உத்தியோகத்தர்கள் குருநாகல் ஏரி வட்டத்தில் மேற்கொள்ளும் நாளாந்த தேடுதலின்போது இந்த இரண்டு மாணவிகளும் சிக்கினர்.

இவர்களில் ஒருவர் கல்கமுவை பிரதேசத்தைச் சேர்ந்தவர் எனவும் மற்றைய மாணவர் குருநாகல் பிரதேசத்துக்கு அருகிலுள்ள கிராமமொன்றில் வசிப்பவர் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

முகநூல் மூலம் தொடர்பு ஏற்பட்ட17 வயது மற்றும் 19 வயதுடைய இளைஞர்களுடன் இருவரும் பழகினர் என்றும் முதன்முறையாக இவர்கள் சந்திப்பதற்காக வந்த போதே அவர்கள் பொலிஸாரிடம் சிக்கினர்.

விசாரணையில் இருவரும் அன்றைய தினம் பாடசாலைக்கு செல்வதாக பெற்றோரிடம் கூறிவிட்டு வீட்டை விட்டு வெளியேறி வழியில் பாடசாலை சீருடைகளை மாற்றிவிட்டு குருநாகல் நகருக்கு வந்துள்ளனர் என்று தெரியவந்தது. (ஐ)

# அரசியலை சாக்கடை என்போர் சுத்தம் செய்வதற்கு வருவதில்லை

## அமைச்சர் ஜீவன் தொண்டமான்

கொழும்பு, ஓக. 14

பலர் அரசியலை சாக்கடை என்று கூறுகின்றார்கள். ஆனால், அதனை சுத்தம் செய்வதற்கு யாரும் வருவதில்லை. இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் இன்று பரிணாமங்களுடன் விஸ்தரித்து பல இளைஞர் யுவதிகளுக்கான பயிற்சி நெறிகளை வழங்கி நாட்டின் கொள்கை தீர்மானத்தில் சந்தர்ப்பத்தையும் வழங்கி வருகிறோம் என அமைச்சர் ஜீவன் தொண்டமான் தெரிவித்தார்.

கண்டி புனித சில்வெஸ்டர் கல்லூரியின் 'கலை அமுத விழா 2023' கண்டி இந்து கலாசார மண்டபத்தில் நடந்த நிகழ்விலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.



மேலும், ஜனாதிபதியுடன் மலையக மக்களின் அபிவிருத்திக்கான சந்திப்பு இடம் பெற்றது. ஆனால், எதிர்க் கட்சியை பிரதிநிதித்துவப் படுத்தும் மலையக பிரதிநிதிகள் அதில் பங்குகொள்ளாது தவிர்த்தனர்.

எமது மக்களின் அபிவிருத்திக்காக ஒன்றிணையாமல் தமது அரசியல் நோக்கத்துக்காக எமது மக்களைப் பிரித்தாள நினைத்து இவர்கள் மட்டுமல்லாது, எமது மக்களின் அபிலாஷைகளையும் புறந்தள்ளி உள்ளார்கள்.

இன அடையாளம் எமது உரிமை. சிலர் இதனை இனவாதமாக மாற்றுவதாலேயே எமது நாடு இவ்வாறான பொருளாதார வீழ்ச்சியை அடைந்தது. இளம் மக்கள் பிரதிநிதிகளாக நாம் இதனை மாற்றி அமைப்போம் - என்றார். (ஐ)

# நடத்துநர் இல்லாத பஸ்கள் 3 மாதங்களில் கொழும்புக்கு

கொழும்பு, ஓக. 14

நடத்துநர்கள் இல்லாத பேருந்துகள் இன்னும் 3 மாதங்களில் கொழும்பு நகரில் சேவையில் ஈடுபடுத்த நடவடிக்கை எடுக்கப்படும் என இலங்கை தனியார் பேருந்து உரிமையாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டபோது, சங்கத்தின் தலைவர் கெமுனு விஜயரத்ன இவ்வாறு தெரிவித்தார்.

இலத்திரனியல் அட்டை மூலம் மட்டுமே அதில் பயணம் செய்ய முடியும் என்றும், இந்த பஸ்களை இயக்குவதன் மூலம் கொழும்பில் போக்குவரத்து நெரிசலை குறைக்க முடியும் - என்று சுட்டிக்காட்டினார். (ஐ)

# மழலைகளின் கண்காட்சி

யாழ்ப்பாணம், ஓக. 14

யாழ்ப்பாணம் கல்வி வலயமும் நல்லூர் கோட்ட கல்வி பணிமனையும் இணைந்து நடத்தும் மழலைகள் கண்காட்சி இன்று திங்கட்கிழமை கொக்குவில் பெரிய புலம் மகா வித்தியாலயத்தில் காலை 9 மணி முதல் பிற்பகல் 4 மணி வரை நடைபெறவுள்ளது.

இதில் பிரதம விருந்தினராக யாழ்ப்பாணம் கல்வி வலய அபிவிருத்தி பிரிவு பிரதிக் கல்விப் பணிப்பாளர் த. பாலராஜ், சிறப்பு விருந்தினராக யாழ்ப்பாணம் கல்வி வலய ஆரம்பப் பிள்ளை பருவ அபிவிருத்தி பிரிவு உதவிக் கல்விப் பணிப்பாளர் சி. கணேசலிங்கம் ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர். (ரி)

Eelanadu
14.08.2023 திங்கட்கிழமை
சோபகிருது வருடம், ஆடி 29

**"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"**
- யோகர் சுவாமிகள்.

**E-mail: eelanaduweekly@gmail.com**
**தொலைபேசி : 021 205 2300**

# அரசியல் ஆய்வுகளின் தோல்வி

அரசியல்வாதிகள் விடயங்களை சரியாகக் கையாளவில்லை. அரசியல்வாதிகளால் வெளிவிவகாரத்தை கையாள முடியவில்லை - அதற்கான வெளிவிவகாரக் கொள்கையொன்றை அவர்களால் வகுத்துக் கொள்ள முடியவில்லை. அரசியல்வாதிகளின் வினைத்திறனற்ற அணுகுமுறைகளால் தமிழ் மக்கள் தொடர்ந்தும் பின்னடைவை சந்தித்து வருகின்றனர் - தமிழ்ச் சூழலில் முன்வைக்கப்படும் அரசியல் கருத்துருவாக்கங்களின் சாரம்சம் இவ்வாறுதான் அமைந்திருக்கும். கடந்த பதினான்கு வருட கால அரசியல் கருத்துரு வாக்கங்கள் அனைத்தினதும் உள்ளடக்கத்தை மேற்கண்டவாறு நாம் உற்றுநோக்கலாம். யதார்த்தபூர்வமான அணுகுமுறையை முன்வைப்பவர்களும் இல்லாமலில்லை. அவர்களது வாதத்தை சரியென்று நிரூபிக்கக்கூடியவாறே, சமகாலத்தின் அரசியல் காணப்படுகின்றது.

இந்தப் பின்புலத்தில் நோக்கினால் தமிழ்த் தேசியம் பேசும் அரசியல்வாதிகள் மட்டுமல்ல, அரசியல் கருத்துருவாக்கிகள் என்போரும் படுதோல்வியடைந்திருக்கின்றனர். அவர்களின் எதிர்வுகூறலை காலம் பெறுமதியற்றதாக்கியிருக்கின்றது. ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் ஊடான அழுத்தங்களால் பெரும் நன்மை விளையுமென்னும் கதைகளுக்கு இப்போது எந்தப் பெறுமதியும் இல்லை.

சர்வதேச அழுத்தங்களால் நன்மை விளையுமென்னும் கதையும் இப்போது ஒன்றுமில்லாமலாகிவிட்டது. மொத்தத்தில் கருத்துருவாக்கிகளின் அரசியல் எதிர்வுகூறல்களோ வெறும் கதைகளாக காணாமல் போய்விட்டது. தமிழ் மக்களின் அரசியல் எதிர்காலமோ தொடர்ந்தும் கீழ்நிலையை நோக்கியே சென்றுகொண்டிருக்கின்றது. 13ஆவது திருத்தச் சட்டத்தைக்கூட அமுல்படுத்துவதற்காக வெளியாரின் தலையீட்டை கோரும் நிலைக்கு தமிழர் அரசியல் கீழிறங்கியிருக்கின்றது.

இவர்கள் கூறியது போன்று, சர்வதேச அழுத்தங்களால் கொழும்பு பாதிக்கப்பட்டிருந்தால் ரணில் விக்கிரமசிங்க 13ஆவது திருத்தத்திலும் குறைப்பு செய்வது தொடர்பில் பேசிக்கொண்டிருக்க மாட்டார். சர்வதேச அழுத்தங்களை எதிர்கொள்வதற்கான துருப்புச்சீட்டுகளை வெற்றிகரமாக கையாளும் திறனுடன் இலங்கை அரசு இருக்கின்றது. அரசு என்பதையும் அரசாங்கம் என்பதையும் போட்டுக் குழப்பிக் கொள்ளக்கூடாது.

இலங்கையில் தலையீடு செய்யும் பிரதான வெளித்தரப்புக்கள் அனைத்துமே இலங்கையின் பெரும்பான்மையான சிங்கள மக்களை கருத்தில் கொண்டே அவர்களின் அரசியல் ஆட்டத்தை ஆடுகின்றனர். தீர்மானங்களை எடுக்கின்றனர். இதில், தமிழ் மக்கள் ஒரு விடயமாகவே கருத்தில்கொள்ளப்படவில்லை. அவ்வாறு கருத்தில் கொள்ளப்பட்டிருந்தால் 13ஆவது திருத்தச் சட்டத்தைக்கூட அமுல்படுத்துவதற்கு இந்தளவு சிக்கல்களை எதிர்கொள்ள வேண்டிய நிலைமை ஏற்பட்டிருக்காது. வெளித் தரப்புகளின் நலன்களுக்கு எதிராக கொழும்பு செயல்பட முற்பட்டால் கொழும்பின் குரல் வளையை பிடிப்பதற்கான உத்தியாகவே சர்வதேச அழுத்தம் பிரயோகிக்கப்படுகின்றது.

இந்தியா, அமெரிக்கா, சீனா - மூன்று சக்திகளும், அவர்களுக்கான பிரத்தியேக ஆட்டத்தை ஆடிக்கொண்டிருக்கின்றனர். அதனை எப்போது எந்த வடிவில் ஆடமுடியுமோ அவ்வாறு ஆடுகின்றனர். இதில் அனைத்தும் இழந்து - இருப்பதை மேலும் இழந்துகொண்டிருக்கும் தமிழர்களோ வெறும் பார்வையாளர் நிலைக்குள் தள்ளப்பட்டிருக்கின்றனர். தமிழ் மக்களை பார்வையாளர் நிலையிலிருந்து வெளியில் எடுக்கும் தந்திரோபாயம் எவரிடமும் இல்லை. அதற்கான ஆற்றலுள்ள தலைமையும் தமிழ் மக்களிடம் இல்லை. இவற்றை கருத்தில் கொள்ளாத ஆய்வுகளால் இனிப் பயனில்லை.

# போதைக்கு அடிமையானோருக்கு வடக்கில் சிகிச்சை நிலையம்!

### மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர்

*யாழ்ப்பாணம், ஓக. 14*

வடக்கில் போதைக்கு அடிமையானவர்களுக்கு சிகிச்சை அளிப்பதற்கான நிலையம் அமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக வடக்கு மாகாண சுகாதார சேவைகள் திணைக்கள பணிப்பாளர் த. சத்தியமூர்த்தி தெரிவித்தார்.

பண்ணையில் அமைந்துள்ள மாகாண சுகாதார திணைக்களத்தில் நேற்று முன்தினம் சனிக்கிழமை நடத்திய ஊடக சந்திப்பிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

மேலும், கடந்த ஒரு வருடமாக வடக்கு மாகாணத்தில் போதைப் பொருள் பாவனையாளர்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது. அவ்வாறு போதைப் பொருளுக்கு அடிமையானவர்கள் மருத்துவமனைக்கு வரும் போது அங்கு அவர்களுக்கு சிகிச்சை அளிக்கப்படுகிறது.

இருப்பினும், முற்று முழுதாக போதைக்கு அடிமையானவர்களை நீண்டகாலமாக வைத்து பராமரித்து சிகிச்சை அளிப்பதற்கென சிகிச்சை நிலையம் ஒன்று வட பகுதியில் இல்லை. அவ்வாறான ஒரு விசேட நிலையத்தை அமைப்பதாயின், அதற்கு பல்வேறு பட்ட வசதிகள் தேவையாக



இருக்கின்றன.

இந்நிலையில், இவ்வாறானதொரு நிலையத்தை வடக்கில் அமைக்க வேண்டும் என்று வடக்கு மாகாண ஆளுநர் முயற்சிகளை எடுத்திருக்கிறார். இதேவேளை புதிதாக ஒருவர் போதைக்கு அடிமையாகாமல் குடும்ப உறுப்பினர்களும் சமூகத்தவர்களும் பாதுகாத்துக் கொள்ள வேண்டும் - என்றார். (ஐ)

# உடுப்பிட்டி பண்டகை பிள்ளையார் சப்பை ரதம் வெள்ளோட்ட நிகழ்வு!

*வடமராட்சி, ஓக. 14*

உடுப்பிட்டி தெற்கு பண்டகைப் பிள்ளையார் ஆலய சப்பை ரத வெள்ளோட்ட நிகழ்வு நேற்று ஞாயிற்றுக் கிழமை மதியம் வெகு சிறப்பாக நடைபெற்றது.

இதன்போது,

வெள்ளோட்டத்தை தொடர்ந்து தம்பிப்பிள்ளை சூரியகுமார் குடும்பத்தினரின் நிதி அனுசரணையில் அமைக்கப்பெற்ற சப்பை ரதத்தை வடிவமைத்த இமையாணன் இந்திரன் சிற்பாலய ஸ்தபதி மகேந்திரன் குழுவினரை கௌரவிக்கும் நிகழ்வும் நடைபெற்றது.

ஆலய பரிபாலன சபை தலைவர் லிங்கம் தலைமையில் நடைபெற்ற கௌரவிப்பு நிகழ்வில் ஆலய பிரதம குருவான சிவஸ்ரீ குமாரசிவ சேவற்கொடியோன் குருக்களின் வாழ்த்துரை வழங்கினார்.

இதேவேளை கடந்த 7ஆம் திகதி திங்கட்கிழமை மதியம் வே. நாகரத்தினம், வே. தம்பிராசா குடும்பங்களின் நிதி அனுசரணையில் நீர்வேலியை சேர்ந்த ச. ஜெயராஜா ஆச்சாரியார் குழுவினரால் வடிவமைக்கப்பட்ட மஞ்சம் வெள்ளோட்டமும், அதனைத் தொடர்ந்து ஆச்சாரியர்கள் கௌரவிப்பும்



நடைபெற்றமையும் குறிப்பிடத்தக்கது. (ஐ-02)

# இயங்காத பொருளாதார மத்திய நிலையத்துக்கு ரூ. 58 இலட்சம் செலவு


*வவுனியா, ஓக. 14*

வவுனியாவில் இயங்காத பொருளாதார மத்திய நிலையத்துக்கு 5 ஆண்டுகளாக பாதுகாப்பு மற்றும் சுத்திகரிப்பு கட்டணமாக 58 இலட்சம் ரூபாய் செலவு செய்யப்பட்டுள்ளது.

வவுனியா மாவட்டத்தில் நீண்ட சர்ச்சையின் மத்தியில் 2018ஆம் ஆண்டு அமைக்கப்பட்ட பொருளாதார மத்திய நிலையம் இன்று வரை பாவனையின்றி உள்ளது. இவ்வாறு பாவனையின்றி காணப்படும் மத்திய நிலையமானது 29 கோடியே 16 இலட்சத்து 39 ஆயிரத்து 356 ரூபாவில் அமைக்கப்பட்டது.

இதன் பாதுகாப்பு, மற்றும் சுத்திகரிப்பு பணிகளுக்காக 2018 முதல் 2022 வரையான காலப்பகுதியில் 58 65 ஆயிரத்து 218 ரூபாய் செலவிடப்பட்டுள்ளது. (ஐ)

# அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'



ஓகஸ்ட் - 14 திங்கட்கிழமை
சோபகிருது வருடம் - ஆடி 29
நல்ல நேரம் : 06.30 - 07.30
ராகு காலம் : 07.30 - 09.00
திதி : சதுர்த்தசி




**மேடம்**

சவால்கள் விவாதங்களில் வெற்றி பெறுவீர்கள். உடன்பிறந்தவர்கள் ஒத்தாசையாக இருப்பார்கள். உத்தியோகத்தில் சில நுணுக்கங்களை கற்றுக் கொள்வீர்கள். தைரியம் கூடும் நாள்.

**இடபம்**

குடும்பத்தில் நிம்மதி உண்டு. இழுபறியாக இருந்த வேலைகள் முடியும். வியாபாரத்தில் போட்டிகள் குறையும். உத்தியோகத்தில் சக ஊழியர்கள் உதவுவார்கள். தேவைகள் பூர்த்தியாகும் நாள்.

**மிதுனம்**

ராசிக்குள் சந்திரன் இருப்பதால் நினைத்த வேகத்தில் சில வேலைகளை முடிக்க முடியாமல் தடை தாமதம் ஏற்படும். அதிகாரிகளால் அலைக்கழிக்கப்படுவீர்கள். சகிப்புத் தன்மை தேவைப்படும் நாள்.

**கடகம்**

தாழ்வுமனப்பான்மையும் வந்துச் செல்லும். வியாபாரத்தில் போட்டிகளையும் தாண்டி ஓரளவு லாபம் வரும். சக ஊழியர்களால் சங்கடங்கள் வரும். அதிகம் உழைக்க வேண்டிய நாள்.

**சிம்மம்**

கடந்த கால இனிய அனுபவங்களை நினைவுக் கூர்ந்து மகிழ்வீர்கள். வாகன வசதிப் பெருகும். உத்தியோகத்தில் தைரியமாக முக்கிய முடிவுகள் எடுப்பீர்கள். சிந்தனை திறன் பெருகும் நாள்.

**கன்னி**

உங்கள் செயலில் வேகம் கூடும். முக்கிய பொறுப்புகளை ஒப்படைப்பார்கள். வியாபாரத்தில் கூடுதல் லாபம் கிடைக்கும். தலைமையின் நம்பிக்கையை பெறுவீர்கள். சாதித்துக் காட்டும் நாள்.

**துலாம்**

கணவன்-மனைவிக்குள் மனம் விட்டு பேசுவீர்கள். குடும்ப பிரச்னை நீங்கும் வியாபாரத்தில் பாக்கிகள் வசூலாகும். புது அதிகாரி உங்களை மதிப்பார். அதிரடி மாற்றம் உண்டாகும் நாள்.

**விருட்சிகம்**

சந்திராஷ்டமம் இருப்பதால் புதிய முயற்சிகள் தள்ளிப்போய் முடியும். உத்தியோகத்தில் மற்றவர்களின் வேலையையும் சேர்த்து பார்க்க வேண்டி வரும். நிதானம் தேவைப்படும் நாள்.

**தனுசு**

உங்கள் திறமைகளை வெளிப்படுத்த நல்ல வாய்ப்புகள் கிடைக்கும். வியாபாரத்தில் நெளிவு சுளிவுகளை கற்றுக் கொள்வீர்கள். புது பொறுப்புகளை ஏற்பீர்கள். தன்னம்பிகை பிறக்கும் நாள்.

**மகரம்**

குடும்பத்தினருடன் சுபநிகழ்ச்சிகளில் கலந்துக் கொள்வீர்கள். வழக்கில் திருப்பம் ஏற்படும். சில புதுமைகளைச் செய்து எல்லோரின் கவனத்தையும் ஈர்ப்பீர்கள். திடீர் யோகம் கிட்டும் நாள்.

**கும்பம்**

புதிய முயற்சிகள் யாவும் வெற்றியடையும். பிள்ளைகள் வியாபாரத்தில் கடமையுணர்வுடன் செயல்படுவீர்கள் ஊழியர்கள் உங்கள் வேலைகளைப் பகிர்ந்துக் கொள்வார்கள். நினைத்தது நிறைவேறும்.

**மீனம்**

எதிர்பார்த்த வேலைகள் தடையின்றி முடியும். வியாபாரத்தில் புது பங்குதாரரை சேர்ப்பீர்கள். உத்தியோகத்தில் சூழ்ச்சிகளை முறியடிப்பீர்கள். பழைய நினைவுகளில் மூழ்கும் நாள்.

# ஹிந்தி, சமஸ்கிருதத்தை திணித்தால் பா. ஜ. க. விளைவுகளை சந்திக்கநேரும்!

## தமிழக காங்கிரஸ் தலைவர்

சென்னை, ஓக. 14

தமிழக மக்கள் மீது ஹிந்தி, சமஸ்கிருதத்தை திணித்தால் பா. ஜ. க. கடும் விளைவுகளை சந்திக்க நேரிடும் என்று தமிழ் நாடு காங்கிரஸ் தலைவர் கே. எஸ். அழகிரி தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பாக அவர் வெளியிட்ட அறிக்கையில்,

ஹிந்தி பேசாத மக்கள் விரும்பும்வரை ஹிந்தியோடு ஆங்கிலமும் தொடர்ந்து ஆட்சி மொழியாக இருக்கும் என்று முன்னாள் பிரதமர் நேரு உறுதிமொழி கூறினார். பிரதமர் லால்பகதூர் சாஸ்திரியும், இந்திரா காந்தியும் உறுதி செய்தார்கள். இதையொட்டி ஹிந்தி பேசாத மக்கள் மீது ஹிந்தி திணிப்புக்கு எதிராக சட்டப் பாதுகாப்பு கிடைத்தது. இத்தகைய சட்ட பாதுகாப்பை சிதைக்கும் வகையில் உள்துறை அமைச்சர் அமித் ஷா ஆங்கிலத்தில் உள்ள பெயரை ஹிந்தியில் மாற்றி, ஹிந்தி பேசாத மக்கள் மீதுதிணிக்க முயல்வது சட்ட விரோத செயலாகும்.

தமிழ்நாட்டின் கள நிலவரத்தைப் புரிந்து கொள்ளாமல், தமிழக மக்கள் மீது ஹிந்தியையும், சமஸ்கிருதத்தையும் திணிக்க முயன்றால் கடும் விளைவுகளை பா. ஜ. க. சந்திக்க நேரிடும். அதிகார மமதையில் ஆட்சியில் இருந்துகொண்டு தமிழக மக்களை கிள்ளுக்கீரையாக நினைத்தால் விளைவுகள் கடுமையாக இருக்கும்.

தமிழக மக்கள் எதையும் சகித்துக் கொள்வார்கள். ஆனால், ஹிந்தியையும், சமஸ்கிருதத்தையும் திணிப்பார்களேயானால் தமிழகம் தழுவிய கடுமையான போராட்டத்தை நடத்த வேண்டிய நிலை ஏற்படும் - என்றுள்ளது.

(ஐ)

# நரேந்திர மோடி மீண்டும் பிரதமராக 40 எம். பிக்கள் தமிழகத்தில் வேண்டும்!

## பா. ஜ. க. தமிழக தலைவர் அண்ணாமலை

விருதுநகர், ஓக. 14

இந்தியாவில் மோடி மீண்டும் ஆட்சிக்கு வர வேண்டும். 400 எம்.பிக்கள் வெற்றிபெற, தமிழகம் மற்றும் புதுச்சேரியில் இருந்து 40 எம். பிக்களை அனுப்ப வேண்டும் என்று பா. ஜ. க. மாநிலத் தலைவர் அண்ணாமலை கூறினார்.

விருதுநகர் மாவட்டம் சாத்தூரில் பா. ஜ. க. மாநிலத் தலைவர் அண்ணாமலை நேற்று நடைபயணம் மேற்கொண்டார். இதன்போது, நடந்த மக்கள் சந்திப்பிலேயே மேற்கண்டவாறு கூறினார்.

காமராஜர் பாடசாலைகளைத் திறந்தார். பிரதமர் மோடி உயர் கல்வி நிறுவனங்களைத் தொடங்கிவருகிறார். பிரதமர் ஹபடி, படி என்கிறார். ஆனால், ‘தமிழக முதல்வர் மதுக் கடைகளைத் திறந்து ஹகுடி, குடி’ என்கிறார். தமிழக அரசு மதுக் கடைகளை மூட நடவடிக்கை எடுக்க வேண்டும்.

தமிழகத்துக்காக மத்திய அரசு ரூ. 7.53 இலட்சம் கோடி நலத் திட்டங்களை வழங்கியுள்ளது. ஆனால், தமிழகம் கடன்கார மாநிலமாக உள்ளது. மதுவுக்கு அடிமையாகி மறுவாழ்வு மையத்தில் சிகிச்சை பெற்ற இளைஞர்களுக்கு அரசு வேலை வழங்கப்படும் என்கிறார்கள். அப்படியானால், படித்து முடித்த இளைஞர்களின் வேலைவாய்ப்பு என்னாவது?

இதுபோன்ற குடிக்கு அடிமையாக்கும் ஆட்சியில் இருந்து மக்கள் விடுதலை பெற வேண்டும். சாமானியர் காமராஜரின் ஆட்சியை நாடு போற்றியது. அதேபோல, 2024இல் சாமானிய மனிதர் மோடி மீண்டும் ஆட்சிக்கு வர வேண்டும். பா. ஜ. க. கூட்டணி 400 எம்.பி.க்கள் வெற்றிபெற, தமிழகம் மற்றும் புதுச்சேரியில் இருந்து 40 எம்.பி.க்களை நாம் அனுப்பிவைக்க வேண்டும் - என்றார். (ஐ)

# நீட் பரீட்சை விலக்கு சட்டத்தில் ஒருபோதும் ஒப்பமிட மாட்டேன்!

## ஆளுநர் ரவி உறுதி

சென்னை, ஓக. 14

நீட் பரீட்சை விலக்கு சட்டத் தீர்மானத்தில் ஒருபோதும் கையொப்பமிட மாட்டேன் என்று தமிழ்நாடு ஆளுநர் ஆர். என். ரவி தெரிவித்துள்ளார்.

மருத்துவ படிப்பில் சேருவதற்கான நீட் தேர்வில் அதிக மதிப்பெண் பெற்ற மாணவ-மாணவிகளை தமிழக ஆளுநர் ஆர்.என். ரவி சந்தித்து கலந்துரையாடினார். இதன்போது, மாணவர் ஒருவரின் கேள்விக்கு பதிலளிக்கையிலேயு அவர் மேற்கண்டவாறு கூறினார்.

நீட் விலக்கு தீர்மானத்தில் எந்த காலத்திலும் நான் கையெழுத்து போட மாட்டேன். நீட் தேர்வுக்கு விலக்கு அளிப்பது மாணவர்களின் போட்டி போடும் திறனை கேள்விக் குறியாக்கிவிடும். நீட் தேர்வுக்கு பயிற்சி மையங்களுக்கு சென்று படிக்க வேண்டும் என்ற அவசியம் இல்லை. நீட் குறித்த தவறான புரிதல் இந்த மாநிலத்தில் உள்ளது.

கடந்த ஒரு வருடத்தில் நீட் தொடர்பான தற்கொலைகள் பற்றி கேள்விப்படவில்லை. அதற்கு முன்பு எந்த மாணவர் இறந்தாலும் நீட் தேர்வுதான் காரணம் என தவறான பிரசாரத்தில் ஈடுபட்டனர். பயிற்சி மையத்தில் படித்தால்தான் நீட் தேர்வில் வெற்றி பெற முடியும் என்பதெல்லாம் போலி பிம்பம்.

நீட் தேர்வு வந்த பிறகு ஏழை, எளிய, அரசுப்பள்ளி மாணவர்களுக்கு மருத்துவ படிப்பு கிடைக்க வழிவகை ஏற்பட்டுள்ளது. மருத்துவ படிப்பில் அரசு பள்ளி மாணவர்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது. நீட் தேர்வுக்கு முன்பு ரூ.1000 கோடி வியாபாரமாக மருத்துவ படிப்பு இருந்தது. இன்று நிலைமை மாறி உள்ளது - என்றார்.

# சமூகநீதி திட்டம் புறக்கணிப்பு திராவிடர் கழகம் போராட்டம்!

சென்னை, ஓக. 14

மத்திய பல்கலைக்கழகங்கள் பிற்படுத்தப்பட்டோருக்கு ஒதுக்கப்பட வேண்டிய இடங்கள் மறுக்கப்பட்டுள்ளன என்று கூறி திராவிடர் கழகத்தினர் நேற்று ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

அந்தக் கழகத்தின் தலைவர் கி. வீரமணி தலைமையில் ஆலங்குளத்தில் இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

இதைத்தொடர்ந்து, கி.வீரமணி நிருபர்களிடம் கூறுகையில்,

‘மத்திய பல்கலைக்கழகங்களில் துணைவேந்தர், பதிவாளர், பேராசிரியர், துணை பேராசியர் இடங்களில் பிற்படுத்தப்பட்டோர், தாழ்த்தப்பட்டோருக்கு ஒதுக்கப்பட வேண்டிய இடங்கள் மறுக்கப்பட்டுள்ளன. மத்திய அரசின் கீழ் உள்ள 45 பல்கலைக்கழகங்களில் 7 இடங்கள் மட்டும்தான் ஒதுக்கப்பட்டுள்ளன.

இதன்மூலம், பா.ஜ.க. ஆட்சியில் சமூக நீதி ஒழிக்கப்பட்டு வருகிறது. அரசியல் சட்ட அமைப்பில் சமூக நீதி என்பது முதலாவதாக குறிப்பிடப்படும். ஆனால், அதை மத்திய அரசு கடைபிடிப்பது இல்லை. ஆர். எஸ்.எஸ். உத்தரவையே செயல்படுத்தி வருகிறார்கள்’ - என்றார்.

(ஐ)

# தமிழரின் பூர்வீக சின்னங்கள் குறித்து மனநோயாளிகள் போன்று கருத்துகள்!

## சரத் வீரசேகர, சவேந்திரவை சாடுகிறார் ரவிகரன்

யாழ்ப்பாணம், ஓக. 14

**தமிழர்களின் பூர்வீக சின்னங்கள் தொடர்பில் சரத் வீரசேகர மற்றும் சவேந்திர சில்வா ஆகியோர் கூறுகின்ற கருத்துகள் மன நோயாளிகள் கூறுகின்ற கருத்துக்கள் போன்றவை என வடக்கு மாகாண சபையின் முன்னாள் உறுப்பினர் துரைராசா ரவிகரன் தெரிவித்துள்ளார்.**

யாழ்ப்பாணத்தில் நேற்று முன்தினம் அவர் நடத்திய செய்தியாளர் சந்திப்பிலேயே இதனைத் தெரிவித்தார்.

வடக்கு மாகாணத்தில் அதிகரித்துள்ள போதைப்பொருள் பாவனை மாணவர் மத்தியிலும் சென்றுள்ளது. மோசமான நிலைமை ஆயிரக்கணக்கான படையினரும், பொலிஸாரும் பணியில் இருக்கும் போது இவ்வாறான சம்பவங்கள் பதிவாகுவது மிகவும் மோசமான நிலைமை ஆகும். இதனை கட்டுப்படுத்த வேண்டும் என சுட்டிக்காட்டியுள்ளார்.

அத்துடன் கொக்குத்தொடுவாய் பகுதியில் மேற்கொள்ளப்பட்ட அகழ்வு பணியின் போது மனித எச்சங்கள் பல காணப்பட்டன. காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் இந்த விடயம் தொடர்பாக அவதானத்துடன் போராடி வருகின்றனர்.

இவர்களுக்கு நீதியான ஒரு தீர்வு கிடைக்க சரியான முறையில் அகழ்வு பணி மேற்கொள்ளப்பட வேண்டும் எனக் குறிப்பிட்டுள்ளார். (ஐ)

# சனிக்கிழமை மட்டும் நாட்டில் 4 கொலைகள்

கொழும்பு, ஓக. 14

நாட்டின் பல பாகங்களிலும் சனிக்கிழமை மாத்திரம் 4 கொலைச் சம்பவங்கள் பதிவாகின என்று பொலிஸ் தலைமையகம் தெரிவித்துள்ளது.

கோப்பாய், கிரிதிவெல, வலஸ்முல்ல, கம்பளை பிரதேசங்களில் இந்தக் கொலைகள் இடம்பெற்றுள்ளன.

உயிரிழந்தவர்கள் 52, 71, 65, 62 வயதுடையவர்கள் என வும் பொலிஸ் தலைமையகம் தெரிவித்துள்ளது.

கொல்லப்பட்டவர்களில் பெண் ஒருவரும் அடங்குவார். இவர வலஸ்முல்லை பிரதேசத்தை சேர்ந்த 65 வயதுடையவர் என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்த கொலைகள் அனைத்தும் தாக்கப்பட்டு இடம்பெற்றுள்ளன என்று பொலிஸார் தெரிவித்தனர். (ஐ)

# பவுஸர் - கார் விபத்து; ஐவர் மருத்துமவனையில்

ஹற்றன், ஓக. 14

எரிபொருளை ஏற்றிச் சென்ற பவுஸரும் காரும் நேருக்கு நேர் மோதிய விபத்தில் மோட்டார் வாகனத்தில் பயணித்த ஐவர் படுகாயமடைந்து மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

நேற்று முன்தினம் சனிக்கிழமை இரவு 10 மணியளவில் ஹற்றன் - நுவரெலியா பிரதான வீதியில் திம்புலபதான சந்தியில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

வெலிமடையிலிருந்து கொட்டகலை திசை நோக்கிச் சென்ற பவுஸரும் நோர்வூட்டில் இருந்து தலவாக்கலை திசை நோக்கிச் சென்ற காரும் நேருக்கு நேர் மோதின.

காரை ஓட்டிச் சென்ற சாரதி மது போதையில் வாகனத்தை செலுத்தினார் என்று கூறப்படுகின்றது. விபத்தில் காயமடைந்த ஐந்து பேரும் நோர்வூட் பிரதேசத்தில் வசிக்கும் 20-30 வயதுக் குட்பட்டவர்கள் என பொலிஸார் தெரிவித்தனர்.

காயமடைந்தவர்கள் திம்புல பத்தனை பொலிஸ் உத்தியோகத்தர்கள் மற்றும் பிரதேசவாசிகளால் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டனர்.

பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ஐ)

# கோகிலா மகேந்திரனின் நூல் வெளியீடு சிறப்புற நடந்தது



வடமராட்சி, ஓக. 14

ஈழத்து எழுத்தாளரும், சமூக சிந்தனையாளரும், உளவள ஆலோசகருமான கோகிலா மகேந்திரனின் 'குடும்பம் ஒரு கதம்பம்' நூல் வெளியீட்டுவிழா வெகு விமரிசையாக இடம்பெற்றது.

வடமராட்சி அல்வாயில் அமைந்துள்ள கலைஅகத்தில் நேற்று முன்தினம் சனிக்கிழமை மாலை 4 மணிக்கு நடைபெற்ற மேற்படி நிகழ்வுக்கு கலாநிதி தி. செல்வமனோகரன் தலைமை தாங்கினார்.

முதல்நிகழ்வாக நூலாசிரியரான கோகிலா மகேந்திரன் உறவுகள் எனும் தலைப்பில் சிறப்புரை ஆற்றினார். அதனைத் தொடர்ந்து வாசகர்களின் பல்வேறு கேள்விகளுக்கும் நூலாசிரியர் பதிலளித்தார்.

தலைமையுரையை தொடர்ந்து நூல் வெளியீட்டுரையை எழுத்தாளர் கந்தர்மடம் அ. அஜந்தன் நிகழ்த்தினார். தொடர்ந்து நூல் தொடர்பிலான கருத்துரைகளை யாழ். பல்கலைக்கழக விரிவுரையாளர்களான இராஜேஷ்கண்ணன், த. அஜந்தகுமார் ஆகியோர் நிகழ்த்தினர்.

இந்நூல் வெளியீட்டை ஒழுங்கு செய்த ஜீவநதி இதழின் பிரதம ஆசிரியர் பரணீதரன் நன்றியுரையை ஆற்றினார். இந் நிகழ்வில் கல்வியலாளர்கள், வாசகர்கள், ஊரவர்கள், நண்பர்கள் என பலரும் கலந்துகொண்டு சிறப்பித்தனர்.

இந்நூலில் வெளியான திருமணம், குடும்பம், பெற்றோரியம் சார்ந்த உளவியல் மைய கட்டுரைகள் ஜீவநதி இதழில் தொடராக வெளிவந்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஐ-02)

# பொற்பதி மக்கள் நலன்புரி கழகத்தின் ஆண்டுவிழாவில் உதவித் திட்டங்கள்!

வடமராட்சி, ஓக. 14

வடமராட்சி கிழக்கு குடத்தனை பொற்பதி மக்கள் நலன் புரி சங்கத்தின் ஐந்தாவது ஆண்டு நிறைவு விழா நேற்று முன்தினம் சனிக்கிழமை சிறப்பாக நடைபெற்றது .

அதன் தலைவர் ஏ. ஜே. அசோக் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் வரவேற்கப்பட்டு கலைநிகழ்வுகள் நடைபெற்றன.

மங்கள விளக்கை அமெரிக்கன் சிலோன் மிசன் திருச்சபை போதகர் டேவிட் நிலுக்சிகன், குடத்தனை கரையூர் அ.மி.த.க. பாடசாலை அதிபர் கதிர்காமலிங்கம், முன்னாள் பருத்தித்துறை பிரதேச சபை உறுப்பினர் ஆ. சுரேஷ்குமார், இளைஞர் சேவை உத்தியோகத்தர் அம்பன் நிதர்சன், குடத்தனை வடக்கு கிராம சேவையாளர் திருமதி தனுசியா, இலங்கை செஞ்சிலுவை சங்க தலைவர் சங்கரப்பிள்ளை திரவியராசா உட்பட பலரும் ஏற்றி வைத்தனர்.



தொடர்ந்து பொற்பதி றோமன் கத்தோலிக்க பாடசாலையில் தரம் ஐந்து புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தி எய்திய மாணவன் கௌரவிக்கப்பட்டார்.

அத்துடன், தெரிவு செய்யப்பட்ட 10 குடும்பங்களுக்கு மாதாந்தம் உதவி தொகையாக தலா 4 ஆயிரம் ரூபாய் பெறுமதியான உணவுப்பொருளும் உயர் கல்வி கற்பதற்காக இரண்டு மாணவர்களுக்கு தலா 20 ஆயிரம் ரூபாயும், வாழ்வாதார மேம்பாட்டுக்காக இருவருக்கு 30 ஆயிரம் ரூபாயும் வழங்கி வைக்கப்பட்டன.

இதேவேளை, பொற்பதி மக்கள் நலன்புரி சங்கத்துடன் தொடர்ந்து 5 ஆண்டுகள் அதன் வளர்ச்சிக்காக பங்காற்றிய சமூக சேவையாளர் வேந்தன், முன்னாள் பருத்தித்துறை பிரதேச சபை உறுப்பினர் ஆ. சுரேஷ்குமார் ஆகியோர் மக்கள் நலன் புரி சங்கத்தால் விருது வழங்கி கௌரவிக்கப்பட்டனர். (ஐ-02)

# திருமணம் செய்வதற்காக சிறுமியை அழைத்துச் சென்ற இளைஞர் கைது!

முல்லைத்தீவு, ஓக. 14

திருமணம் செய்வதாக கூறி 15 வயது சிறுமியை அழைத்துச் சென்ற இளைஞரை பொலிஸார் முல்லைத்தீவு - கள்ளப்பாட்டில் வைத்து கைது செய்துள்ளனர்.

விசுவமடுவை சேர்ந்த குறித்த சிறுமியை காணவில்லை என கடந்த மாதம் சிறுமியின் பெற்றோரால் விசுவமடு பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டிருந்தது.

அதனையடுத்து, நேற்றுமுன் தினம் முல்லைத்தீவு கள்ளப்பாட்டில் வைத்து அந்தப் பகுதியை சேர்ந்த சேர்ந்த 26 வயதுடைய இளைஞரை பொலிஸார் கைது செய்தனர்.

இந்நிலையில், சிறுமி மருத்துவ பரிசோதனைக்காக முல்லைத்தீவு, மாஞ்சோலை வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார். கைது செய்யப்பட்ட இளைஞரை தடுப்புக் காவலில் வைத்து பொலிஸார் விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.

இதன்போது கடந்த மாதம் இந்த இளைஞர் சிறுமியை திருமணம் செய்வதாகக் கூறி அழைத்துச் சென்றுள்ளமை தெரியவந்துள்ளது. (ஐ)

# தொடர் காய்ச்சலால் குடும்பஸ்தர் மரணம்

யாழ்ப்பாணம், ஓக. 14

யாழ்ப்பாணத்தில் தொடர் காய்ச்சலால் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டிருந்த குடும்பஸ்தர் நேற்று முன்தினம் உயிரிழந்தார்.

கோண்டாவில் மேற்கை சேர்ந்த 42 வயதுடைய நாராயணசாமி கோவர்த்தனன் என்ற 3 பிள்ளைகளின் தந்தையே உயிரிழந்தார்.

கடந்த 5 நாட்களாக காய்ச்சலால் பீடிக்கப்பட்டிருந்த அவர், யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த நிலையிலேயே சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார்.

இந்த மரணம் தொடர்பில் மேலதிக விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. (ஐ)

# மின்சாரத்தை தனியாரிடம் பெறுவதற்கு அரசு திட்டம்!

கொழும்பு, ஓக. 14

**தொடரும் வறட்சியான காலநிலை அரசாங்கத்துக்கு நெருக்கடியான சூழ்நிலையை உருவாக்கியுள்ளது. இதையடுத்து, அரசாங்கம் தனியார் துறையிடமிருந்து மின்சாரத்தை கொள்வனவு செய்வதற்கு தீர்மானித்துள்ளது.**

அரசாங்கம் அவசரமாக மின்சாரத்தை தனியார் துறையினரிடமிருந்து கொள்வனவு செய்ய தீர்மானித்துள்ள அதே வேளை வறட்சியால் பாதிக்கப்பட்டுள்ள ஆயிரக்கணக்கான விவசாயிகளுக்கு நட்டஈடு வழங்கவும் தீர்மானித்துள்ளது.

தனியார் துறையினரிடமிருந்து அவசர மின்சாரத்தை கொள்வனவு செய்வதற்கு அமைச்சரவை இந்த வாரம் அனுமதியளித்தது. ஆறு மாத காலத்துக்கு நாளாந்தம் 100 மெகாவாட்ஸ் மின்சாரத்தை கொள்வனவு செய்வதற்கு அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது. அடுத்த மாதம் இதற்கான நடவடிக்கைகள் ஆரம்பமாகவுள்ளன.

இதேவேளை, நீர் மின்சார உற்பத்தி பாதிக்கப்படுவதால் தேவை அதிகரிக்கும் என தெரிவித்துள்ள இலங்கை மின்சார சபை நாளாந்தம் 150 மெகாவாட்ஸ் மின்சாரத்தை கொள்வனவு செய்ய வேண்டியிருக்கும் என தெரிவித்துள்ளது.

நீர்மின் உற்பத்தியில் வீழ்ச்சியடைந்துள்ளதுடன் நுரைச்சோலை மின் நிலையத்தின் ஒரு பிரிவு தொழில்நுட்ப பாதிப்புகளை எதிர்கொண்டுள்ளதும் குறிப்பிடத்தக்கது.

இதேவேளை வறட்சியால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு இழப்பீட்டை வழங்குவது தொடர்பில் அமைச்சரவை பத்திரத்தை சமர்ப்பிக்கவுள்ளதாக அமைச்சர் மகிந்த சமரவீர தெரிவித்துள்ளார். (ஐ)

## துருக்கி விபத்தில் சிக்கியவர்களில் 9 இலங்கையரே மருத்துவமனையில்!

கொழும்பு, ஓக. 14

துருக்கியின் இஸ்தான்புல்லில் விபத்தில் சிக்கிய இலங்கை தொழிலாளர்கள் குணமடைந்து வருகின்றனர் என்று வெளிவிவகார அமைச்சு தெரிவித்துள்ளது.

துருக்கியின் இஸ்தான்புல் நகரில் இலங்கை தொழிலாளர்களை ஏற்றிச் சென்ற பஸ் ஒன்று கடந்த 9ஆம் திகதி விபத்துக்கு உள்ளானது.

இந்த விபத்தில் சிக்கிய 29 இலங்கையர்களில் 9 பேர் தற்போது இஸ்தான்புல்லில் உள்ள மூன்று வெவ்வேறு மருத்துவமனைகளில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

துருக்கிக்கான இலங்கை தூதரகம், இலங்கையர்களை பணியமர்த்திய நிறுவனத்துடனும் மருத்துவ மனை அதிகாரிகளுடனும் தொடர்புகொண்டு காயமடைந்தவர்களின் நிலைமை குறித்து அறிந்து தேவையான உதவிகளை செய்து வருகிறது.

இதேவேளை, மருத்துவமனைகளில் சிகிச்சை பெற்று வந்த ஏனைய 20 பேர் அன்றைய தினமே வெளியேறினர் என்று தெரிவிக்கப்பட்டது. (ஐ)

## கோப்பாய் ஆசிரிய கலாசாலையில் திறன்வகுப்பறை திறந்து வைப்பு!



யாழ்ப்பாணம், ஓக. 14

கோப்பாய் ஆசிரிய கலாசாலையில் நூற்றாண்டையொட்டிப் புதிதாக அமைக்கப்பட்ட திறன் வகுப்பறையை கலாசாலையில் 1952 - 1953 காலப்பகுதியில் பயிற்சி பெற்ற காரைநகர் சுந்தரமூர்த்தி வித்தியாலய முன்னாள் ஆசிரியையான 95 வயதான பராசக்தி கந்தையா கடந்த வெள்ளிக்கிழமை திறந்துவைத்தார்.

அமெரிக்காவைத் தளமாகக் கொண்ட தொண்டு நிறுவனமான ஐ. எம். எச். ஓ. (IMHO) மற்றும் பிரித்தானியாவைத் தளமாகக் கொண்ட ரட்ணம் பவுண்டேசன் என்பவற்றின் அனுசரணையில் திறன்பலகையும் அதற்குரிய மடிக்கணினியும் வழங்கப்பட்டன என்று தெரிவிக்கப்பட்டது.

கலாசாலை அதிபர் ச. லலீசன் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் இசுருபாய கல்வி அமைச்சின் தேசிய கல்வியியல் கல்லூரிகளுக்கான பணிப்பாளர் களனி ஹேமமாலி கல்வி அமைச்சின் செயலிட்ட பணிப்பாளர் காரைக்கவி கந்தையா பத்மானந்தன் உள்ளிட்டோரும் கலந்து கொண்டனர்.

தனது தொண்ணூற்றைந்தாவது வயதிலும் தான் கற்ற கலாசாலைமீதான பற்றுடன் நிகழ்வில் ஆர்வத்துடன் கலந்து கொண்டதோடு திறன் பலகையில் எழுதியும் ஆசிரிய மாணவர்கள் மத்தியில் தனது பயிற்சி கால அனுபவங்களை அரை மணி நேர உரையாக வழங்கியும் சிறப்பித்த மூத்த ஆசிரியர் பராசக்தியைப் பலரும் பாராட்டினர். (ஐ)

## பரிசில்தின விழா

யாழ்ப்பாணம், ஓக. 14

யாழ்ப்பாணம் - கொழும்புத்துறை இந்து மகா வித்தியாலயத்தின் தவத்திரு சிவயோக சுவாமிகள் ஞாபகார்த்த பரிசில் தின விழா நாளை மறுதினம் புதன்கிழமை காலை 9 மணிக்கு நடைபெறவுள்ளது.

பாடசாலையின் சிவ யோக சுவாமிகள் மண்ட பத்தில் அதிபர் க. தவகீஸ்வரன் தலைமையில் நடை பெறும் இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்ப்பாணம் வலயக் கல்வி பணிப்பாளர் பொ. ரவிச்சந்திரன், சிறப்பு விருந்தினர்களாக ஆ. சி. ந. சிவநேசன், பரா. சாந்தகுமார் ஆகியோர் பங்கேற்கவுள்ளனர். (ஐ)



## செஞ்சோலை மாதிரி கிராமத்துக்கு சந்நிதியான் ஆச்சிரமம் உதவிகள்!

வடமராட்சி, ஓக. 14

வடமராட்சி தொண்டைமனாறு சந்நிதியான் ஆச்சிரமத்தால் செஞ்சோலை மாதிரி கிராமம், தேறாங்கண்டல் மக்களுக்கு 5 இலட்சத்து 36 ஆயிரம் ரூபாய் பெறுமதியான உணவுப் பெருட்கள் நேற்று முன்தினம் வழங்கி வைக்கப்பட்டது.

செஞ்சோலை இல்லத்தில் வளர்ந்து தற்போது கிளிநொச்சி - மலையாளபுரத்தில் உள்ள செஞ்சோலை மாதிரி கிராமத்தில் வசிக்கின்ற பொருளாதாரத்தால் நலிவடைந்தவர்களில் தெரிவு செய்யப்பட்ட 24 குடும்பங்களுக்கு 96 ஆயிரம் ரூபாய் பெறுமதியான உலர் உணவுப் பொருட்கள் வழங்கப்பட்டன.

முல்லைத்தீவின் தேறாங்கண்டல் கிராமத்தில் வசிக்கின்ற பொருளாதாரத்தால் நலிவடைந்தவர்களில் தெரிவு செய்யப்பட்ட 110 குடும்பங்களுக்கு 4 இலட்சத்து 40 ஆயிரம் ரூபாய் பெறுமதியான அத்தியவசிய மான உணவுப் பொருட்கள் வழங்கப்பட்டன.

இந்த உதவிகளை சந்நிதியான் ஆச்சிரம முதல்வர் மோகனதாஸ் சுவாமிகள் அவரின் தொண்டர்கள், சமூக செயல்பாட்டாளரான இ. தயாபரன், தேறாங்கண்டல் கிராம சேவையாளர் ஆகியோருடன் நேரடியாக சென்று வழங்கி வைத்தார்.

## மலையிலிருந்து விழுந்த பிரிட்டன் பிரஜை படுகாயம்!

கொழும்பு, ஓக. 14

எல்லை பிரதேசத்தில் உள்ள மலை ஒன்றில் ஏறிக்கொண்டிருந்த பிரித்தானிய பிரஜை ஒருவர் சுமார் 50 அடி பள்ளத்தில் வீழ்ந்து படுகாயமடைந்தார்.

இந்த சம்பவம் நேற்று ஞாயிற்றுக்கிழமை அதிகாலை இடம்பெற்றுள்ளது.

படுகாயமடைந்த பிரித்தானிய பிரஜை எல்லை சுற்றுலா பொலிஸார், முச்சக்கரவண்டி சாரதிகள் மற்றும் அருகில் உள்ள ஹோட்டல்களின் பணியாளர்களால் மீட்கப்பட்டார்.

மீட்கப்பட்ட பிரித்தானிய பிரஜை தியத்தலாவை மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார். (ஐ)

# கடலுக்குச் சென்று காணாமல் போன மகனை கண்டுபிடித்து தர கோரிக்கை!

## கண்ணீர்மல்க விடுத்தார் தாயார்

வடமராட்சி, ஓக. 14

கடலுக்கு சென்று காணாமல் போன தனது மகனை கண்டுபிடித்துத் தருமாறு தாயார் ஒருவர் கதறியழுது கண்ணீர் மல்கக் கோரிக்கை விடுத்தார்.

யாழ்ப்பாணம் வடமராட்சி ஊடக இல்லத்தில் நடந்த செய்தியாளர் சந்திப்பிலேயே அந்தத் தாயார் இந்தக் கோரிக்கையை முன்வைத்தார்.

இவருடைய மகன் கடந்த 4ஆம் திகதி கடலுக்கு சென்ற நிலையில் வீடு திரும்பவில்லை என்று தெரிவிக்கப்பட்டது.

இந்த நிலையில் அவர் கடத்தப்பட்டுள்ளார் என்றும் இது தொடர்பில் நாகர்கோவில் பகுதியில் ஒருவரை ஊரவர்கள் பிடித்து பருத்தித்துறை பொலிஸில் ஒப்படைத்துள்ளனர் எனவும் மகனுடன் சென்ற ஒருவர் கஞ்சா கடத்தல் தொடர்பில் கைதாகி இருக்கிறார் என்றும் அந்தத் தாயார் தெரிவித்துள்ளார்.




தனது மகன் வீடு திரும்பாதது குறித்து பருத்தித்துறை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு அளித்துள்ளார் என்றும் பொலிஸார் அவரைத் தடி வருகின்றனர் எனவும் கூறியதுடன் தனது மகனை மீட்டுத் தர அதிகாரிகள் மேலும் நடவடிக்கைகளை முன்னெடுக்க வேண்டும் என்றும் கோரிக்கை விடுத்தார்.

இதனிடையே,இந்தியாவிலிருந்து தம்மை ஒருவர் தொடர்பு கொண்டு காணாமல் போனவர் கஞ்சா கடத்தலுக்காக இந்தியா வந்தவேளை தவறிவிட்டார் என்று கூறினார் என்றும் அன்றிலிருந்து அழைப்பு வந்த தொலைபேசி இலக்கமும் செயல்படவில்லை என்றும் இந்த சந்திப்பில் தெரிவிக்கப்பட்டது.

# 13ஆம் திருத்தத்துக்கு எதிரான எதிர்ப்பை தென்னிலங்கையில் ஒன்றிணைப்போம்!

## மகிந்த புறக்கணிக்கப்படவும் 13 பிளஸே காரணமாம் உதய கம்மன்பில சொல்கிறார்!

கொழும்பு, ஓக. 14

**13 பிளஸ் என்ற நோக்கத்துடன் செயல்பட்டதால்தான் 2015 ஆம் ஆண்டு நாட்டு மக்கள் மகிந்த ராஜபக்ஷவை புறக்கணித்தார்கள். ஜனாதிபதியின் எதிர்கால ஜனாதிபதி கனவுக்காக 13ஐ அமுல்படுத்த இடமளிக்க முடியாது. 13இற்கு எதிராக தென்னிலங்கையில் எதிர்ப்பை ஒன்றிணைப்போம் என பிவிதுரு ஹெல உருமய கட்சியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான உதய கம்மன்பில தெரிவித்தார்.**

கொழும்பில் அவர் நடத்திய செய்தியாளர் சந்திப்பிலேயே நேற்று முன்தினம் இதனைத் தெரிவித்தார்.

அந்த சந்திப்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு,

அரசமைப்பின் 13 ஆவது திருத்தத்தை முழுமையாக அமுல்படுத்துவதாக கூறிக் கொண்டு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இல்லாத பிரச்னைகளை தோற்றுவிக்க முயற்சிக்கிறார். 13ஆவது திருத்தத்தை அமுல்படுத்த புதிய சட்டத்திருத்தங்களை கொண்டு வர வேண்டும் எனவும் ஜனாதிபதி குறிப்பிடுகிறார்.

நடைமுறை அரசமைப்பின் ஒரு திருத்தமாகவே 13 ஆவது திருத்தம் காணப்படுகிறது. ஆகவே, புதிதாக சட்டத்திருத்தங்களை மேற்கொள்ள வேண்டிய அவசியம் ஏதும் கிடையாது.



13ஆவது திருத்தத்துக்கு அப்பால்பட்டு 13 பிளஸை அமுல்படுத்த ஜனாதிபதி முயற்சிக்கிறார்.

விகிதாசார தேர்தல் முறைமையை இரத்து செய்வதாக ஜனாதிபதி குறிப்பிடுகிறார். விகிதாசார தேர்தல் முறைமையை இரத்து செய்தால் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் சிறுபான்மை இனத்தவர்களாக வாழும் சிங்களவர்கள் உள்ளூராட்சி மன்ற சபைகளுக்கான பிரதிநிதித்துவத்தில் பாதிக்கப்படுவார்கள்.

வடக்கு, கிழக்கு மாகாணங்களில் வாழும் தமிழர்கள், முஸ்லிம்கள் குறித்து கவனம் செலுத்தும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க சிங்களவர்களை இரண்டாம்பட்சமாக் கியுள்ளார்.

13 பிளஸ் என்ற நோக்கத்துடன் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ செயல்பட்டதால் நாட்டு மக்கள் அவரை 2015ஆம் ஆண்டு புறக்கணித்தார்கள். அரசமைப்பின் 13ஆவது திருத்தத்தை அமுல்படுத்த நாட்டு மக்கள் ஒருபோதும் இடமளிக்கமாட்டார்கள். பொருளாதார பாதிப்புக்கு மத்தியில் 13 அமுல்படுத்த ஜனாதிபதி எடுக்கும் முயற்சிகள் ஒருபோதும் வெற்றிபெறாது. ஆகவே, 13 ஆவது திருத்தத்துக்கு எதிரான தென்னிலங்கையின் எதிர்ப்பை ஒன்றிணைப்போம் - என்றார். (ஐ)

# வெலிக்கடை சிறையின் பெறுமதி 3,200 கோடி ரூபாய் என மதிப்பீடு!

கொழும்பு, ஓக. 14

வெலிக்கடை சிறைச்சாலை அமைந்துள்ள காணியின் வர்த்தகப் பெறுமதி 3 ஆயிரத்து 200 கோடி ரூபாய் என நீதி மற்றும் சிறைச்சாலை விவகார இராஜாங்க அமைச்சர் அனுராத ஜயரத்ன தெரிவித்துள்ளார்.

இதேநேரம், ஹொரணையில் நகர அபிவிருத்தி அதிகார சபைக்கு சொந்தமான 200 ஏக்கர் காணி சிறைச்சாலை திணைக்களத்துக்காக சுவீகரிக்கப்பட்டுள்ளதாக அமைச்சர் தெரிவித்துள்ளார்.

ஹொரணையில் சிறைச்சாலை அமைப்பதற்கான செலவு ஆயிரத்து 800 கோடி ரூபாய்க்கு மிகாமல் திட்ட அறிக்கைகளை பெறவும் அறிவுறுத்தப்பட்டுள்ளது என்றும் அவர் கூறினார்.

"சர்வதேச கேள்வி கோரல் மூலம் அனைத்து நவீன வசதிகளுடன் திட்டத்தை முடிக்க நாங்கள் நம்புகிறோம். புதிய சிறை தற்போது இருக்கும் சிறையை விட நான்கு மடங்கு பெரியது" என்றும் அமைச்சர் தெரிவித்தார்.

இது தவிர, திறந்தவெளி சிறைச்சாலை முறையை மேம்படுத்துவதற்கும், சிவில் குற்றவாளிகளுக்கு புவிசார் குறியிடல் முறையை அறிமுகப்படுத்துவதற்கும் எதிர்பார்க்கப்பட்டுள்ளது.

ஜனாதிபதி ஊடக மையத்தில் நடைபெற்ற ஊடக சந்திப்பின் போதே அமைச்சர் இந்தக் கருத்துகளை வெளிப்படுத்தினார். (ஐ)

# செவித்திறன் குறைந்தோருக்கான சாரதி அனுமதிப் பத்திரம் வழங்கல்

கொழும்பு, ஓக. 14

போக்குவரத்து அமைச்சர் பந்துல குணவர்த்தன தலைமையில் செவித்திறன் குறைபாடு உள்ளவர்களுக்கு சாரதி அனுமதிப்பத்திரம் வழங்கும் வேலைத்திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இந்த வேலைத்திட்டம் நேற்று முன்தினம் குருநாகலில் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

வடமேல் மாகாணத்தில் மாத்திரம் 77 ஆயிரம் செவித்திறன் குறைபாடுள்ளவர்கள் இருக்கின்றனர் என்று தெரிவித்த அமைச்சர், அவர்களுக்கு கடந்த காலங்களில் சட்டபூர்வ சாரதி அனுமதிப்பத்திரம் வழங்கப்படவில்லை - என்றும் கூறினார். (ஐ)

# கனடா சிறுவர்களுக்கு பாலியல் துன்புறுத்தல்!

கொழும்பு, ஓக. 14

கனடா நாட்டு சிறார்கள் இருவரை பாலியல் துன்புறுத்தல் செய்தார் என்று கூறப்படும் சுற்றுலா வழிக்காட்டி ஒருவரை தேடி பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

16 வயதான சிறுமியும் சிறுவனும் அவர்களின் தந்தையுடன் இலங்கைக்கு சுற்றுலா வந்துள்ளனர்.

சுற்றுலாவின் போது, கொஸ்கொடையில் இருந்து காலி கோட்டையை பார்வையிடுவதற்காக வானில் பயணித்த இரண்டு சிறுவர்களையும் சுற்றுலா வழிகாட்டி பாலியல் துஷ்பிரயோகம் செய்தார் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

அந்தப் பகுதியில் இருந்து, தப்பிச் சென்றுள்ள சந்தேகநபரை தேடி விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. (ஐ)

# தேங்காய் எண்ணெய் ஆய்வின்றி சந்தைக்கு

கொழும்பு, ஓக. 14

உள்நாட்டில் உற்பத்தி செய்யப்படும் தேங்காய் எண்ணெய் முறையான ஆய்வுகள் இன்றி சந்தைக்கு விடப்படுகிறது என்று நுகர்வோர் உரிமைகளைப் பாதுகாப்பதற்கான தேசிய நிறுவனம் தெரிவித்துள்ளது.

கொழும்பில் நேற்று நடந்த செய்தியாளர் அந்த நிறுவனத்தின் தலைவர் ரஞ்சித் விதானகே மேற்கண்டவாறு கூறினார். (ஐ)

# சிவில் பாதுகாப்பு திணைக்களத்தை செயல்படுத்தும் திட்டம் தயாராகிறது

## கோபா குழுவின் ஆலோசனையை அடுத்து

கொழும்பு, ஓக. 14

சிவில் பாதுகாப்புத் திணைக்களம் ஏதாவது ஒருவகையில் செயல்படுவதற்கான வேலைத்திட்டத்தைத் தயாரிக்குமாறு கோபா குழுவின் தலைவர் இராஜாங்க அமைச்சர் லசந்த அழகியவண்ண ஆலோசனை வழங்கியுள்ளார்.

சிவில் பாதுகாப்புத் திணைக்களத்தின் 2019/2020/2021 ஆண்டுகளுக்கான கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கைகள் மற்றும் தற்போதைய செயலாற்றுகை தொடர்பில் விசாரணை செய்வதற்கு அரசாங்கக் கணக்குகள் பற்றிய குழு (கோபா) இராஜாங்க அமைச்சர் லசந்த அழகியவண்ண தலைமையில் அண்மையில் பாராளுமன்றத்தில் கூடியபோதே அவர் இந்த ஆலோசனையை வழங்கினார்.

அத்துடன், சிவில் பாதுகாப்புத் திணைக்களம் தொடர்பான அரசாங்கக் கொள்கையுடன் பொருந்தும் வகையில் எதிர்கால நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு சட்டரீதியான கட்டமைப்பை தயாரிப்பது தொடர்பில் செப்ரெம்பர் 11ஆம் திகதிக்கு முன்னர் திகதிகளுடன் கூடிய அறிக்கையை கோபா குழுவுக்கு வழங்குமாறும் லசந்த அழகியவண்ண பரிந்துரை வழங்கினார்.

மூன்றரை வருடங்களாக சிவில் பாதுகாப்புத் திணைக்களத்துக்கு ஆட்சேர்ப்புகள் செய்யப்பட்டில்லை என்றும் சிவில் பாதுகாப்புப் படை தேய்வடையும் படையாக இனங்காணப்பட்டுள்ளதாகவும் அதிகாரிகள் இதன்போது தெரிவித்தனர். அத்துடன், தற்பொழுது 33 ஆயிரத்து 687 பேர் சிவில் பாதுகாப்புப் படையில் சேவையில் ஈடுபட்டுள்ளனர் என்று அதிகாரிகள் சுட்டிக்காட்டியதுடன், அவர்கள் ஈடுபடுத்தப்பட்டுள்ள இடங்கள் மற்றும் அதன் விபரங்களையும் குறிப்பிட்டனர்.

அத்துடன், இந்தப் படையை ஸ்தாபித்தல் மற்றும் அதன் செயற்பாடுகள் தொடர்பில் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கமல் குணரத்ன இதன்போது தெளிவுபடுத்தினார். மேலதிகமாக, தேவைக்கு அதிகமாக மேற்கொள்ளப்பட்டுள்ள கொள்வனவுகள், இந்தத் திணைக்களத்தால் மேற்கொள்ளப்பட்ட திட்டங்கள் மற்றும் இந்தப் படையால் பயிரிடப்பட்ட தானியங்கள், விளைச்சல்களை விற்பனை செய்வது தொடர்பிலும் இதன்போது கலந்துரையாடப்பட்டது. (ஐ)

# கசினோ சூதாட்ட வரியை அதிகரிக்க அரசு தீர்மானம்!

கொழும்பு, ஓக. 14

நாட்டில் முன்னெடுக்கப்பட்டு வரும் பொருளாதார மறுசீரமைப்புகள் மையப்படுத்தி கசினோ சூதாட்ட வரியை அதிகரிப்பதற்கு அரசாங்கம் தீர்மானித்துள்ளது. இதற்கான வரி அதிகரிப்பு சட்டமூலம் குறித்து ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிடம் நிதி இரா ஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய தெளிவுப்படுத்தியுள்ளார்.

ஆளும் கட்சி உறுப்பினர்களுடனான சந்திப்பு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையில் நடைபெற்றது. இதன் போதே இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய கசினோ சூதாட்ட வரியை அதிகரிக்க சட்டமூலம் தொடர்பில் விளக்கமளித்தார்.

எவ்வாறாயினும் குறித்த சட்டமூலம் இன்னும் முழுமைப்படுத்தப்படாத நிலையில் அமைச்சர்களின் ஆலோசனைகளை பெற்றுக்கொள்ளுமாறு ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க இதன் போது தெரிவித்துள்ளார்.

இந்நிலையில் சுற்றுலாத்துறையை பாதிக்காத வகையில் இவ்வாறான வரி சட்ட மூலங்கள் முன்னெடுக்கப்பட வேண்டும் என்று அமைச்சர் டயனா கமகே கேட்டுக்கொண்டார். (ஐ)

# வெளிநாட்டு தொழிலாளர்க்கான வீடுகள் நிர்மாணம் ஆரம்பம்!

கொழும்பு, ஓக. 14

தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபை வெளிநாட்டிலுள்ள இலங்கை தொழிலாளர்களுக்கு வீடுகளை நிர்மாணிக்கும் வேலைத்திட்டத்தை ஆரம்பித்துள்ளது.

இதனை வெளிநாட்டு வேலை வாய்ப்பு பணியகம் மற்றும் தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபை இணைந்து செயல்படுத்தப்படும்.

இந்த வீடமைப்புத் திட்டத்திற்கு வெளிநாட்டு வேலை வாய்ப்பு பணியகம் நிதியுதவி வழங்குவதுடன், தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையால் நிர்மாணப் பணிகள் மேற்கொள்ளப்படும். (ஐ)

# அமெரிக்கா: ஹவாய் காட்டுத்தீயில் காணாமல்போன 1,000 பேர், 67 பேர் பலி!

அமெரிக்காவின் ஹவாய் தீவுகளில் ஒன்றான மாவியில் பற்றி எரிந்து வரும் தீயில் சிக்கி உயிரிழந்தோரின் எண்ணிக்கை 67 ஆக அதிகரித்துள்ளது. பல நூற்றுக்கணக்கானோர் மாயமானதாக அறிவிக்கப்பட்டு, அவர்களை மீட்கும் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இதுகுறித்துப் பேசிய ஆளுனர் ஜோஷ் கிரீன், "ஹவாய் வரலாற்றிலேயே இது மிகவும் மோசமான இயற்கைப் பேரழிவாக இருக்கிறது," என்றார்.

மேலும், வரலாற்றுச் சிறப்புமிக்க லஹைனா கடற்கரையில் 80 சதவீத பகுதிகள் தீக்கு இரையாகிவிட்டன என்றும் கூறினார்.

தீ வேகமாகப் பரவியதால் லஹைனா கடற்கரையில் குழுமியிருந்த சுற்றுலாப் பயணிகள் கடலுக்குள் குதித்து மிகுந்த சிரமங்களுக்கு இடையே பல மணிநேரம் நடந்து தப்பிச் சென்றனர்.

கரையை காட்டுத்தீ முற்றிலுமாக ஆக்கிரமித்த நேரத்தில் கடல்நீருக்குள் குதித்து தப்ப முயன்றவர்களில் தனது குடும்பமும் ஒன்று எனக் குறிப்பிட்டார் விக்ஸே ஃ போன்ஸேலின்கம.

அங்கு வெடிப்புகள் நிகழ்ந்ததாகவும் நெருப்பு காற்றில் மேலெழும்பியதாகவும் அந்தச் சம்பவம் குறித்து விவரித்த அவர், அதிலிருந்து தப்பிக்க முயன்றபோது அவரது குழந்தைகள் கிட்டத்தட்ட கடலோடு அடித்துப் போகும் அபாயத்தையும் எதிர்கொண்டதாக குரல் நடுங்கத் தெரிவித்தார்.

பல்லாயிரக்கணக்கான பார்வையாளர்கள் அங்கிருந்து மீட்கப்பட்ட நிலையில், தீவின் மேற்குப் பகுதியில் சுமார் 11 ஆயிரம் பேர் மின் இணைப்பு துண்டிக்கப்பட்டு தவிக்கும் நிலை உருவானது.

### அமெரிக்காவின் மிகப்பெரிய ஆலமரம் கரிக்கட்டையாக நிற்கும் அவலம்

பற்றி எரியும் காட்டுத் தீயை அணைக்க ஏராளமான தீயணைப்பு வீரர்கள் போராடி வருகின்றனர். கடந்த செவ்வாய்க்கிழமை முதல் தீ எரிந்து வரும் நிலையில், டோரா புயலின் காரணமாக வீசிய சூறாவளிக் காற்று தீ மேலும் பரவக் காரணமாக இருந்தது.

மீட்பு மற்றும் நிவாரணப் பணிகளுக்கு அதிவிரைவாக போதுமான நிதி ஆதாரங்கள் கிடைக்கும் வகையில் தீ பாதிப்பு ஏற்பட்ட பகுதிகளில் பேரிடர் அவசர நிலையை அதிபர் ஜோ பைடன் பிறப்பித்துள்ளார்.

ஹவாய் தீவின் தலைநகராக இருந்த லஹைனா ஒரு கடற்கரை நகரம். வரலாற்றுச் சிறப்பு மிக்க, சுற்றுலா முக்கியத்துவம் மிக்க இடங்களுக்குப் பெயர்போன நகராக இது திகழ்கிறது. இதுபோன்ற பெரும்பாலான இடங்கள் பற்றி எரிந்த தீயின் காரணமாக கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளன.

இதில் 122 ஆண்டுகளாகச் செயல்பட்டு வந்த பயனீர்ஸ் இன் என்ற விடுதியும் ஒன்று. இந்த விடுதி முழுமையாக





Image credits: Google, Reuters

தீயில் எரிந்துவிட்டதாக உரிமையாளர்கள் தெரிவித்துள்ளனர்.

லஹைனாவின் புகழ்பெற்ற ஆலமரத்தையும் இந்த தீ விட்டு வைக்கவில்லை. இந்த ஆலமரம் அமெரிக்காவிலேயே மிகப்பெரிய மரமாகக் கருதப்படுகிறது.

தீயில் கருகிய நிலையில் அப்படியே நிற்கும் அந்த ஆலமரம் இனிமேல் சுற்றுலாப் பயணிகளை மகிழ்விக்கும் நிலைக்குத் திரும்பாது என்ற அச்சம் அனைவரிடமும் காணப்படுகிறது.

### அமெரிக்காவில் காட்டுத்தீ அதிகரித்து வருவது ஏன்?

ஹவாய் தீவில் இதுபோல் காட்டுத் தீ பற்றி எரிவதற்கு உலக அளவில் நிலவும் மோசமான காலநிலையே காரணமாக அமைந்துள்ளது.

காட்டுத் தீயைப் பொறுத்தளவில் கிரீஸ் நாட்டு வரலாற்றிலேயே இல்லாத ஜூலை மாதமாக கடந்த மாதம் ரோட்ஸ் மற்றும் கோர்ஃபு தீவுகள் மிக மோசமாகப் பாதிக்கப்பட்டன.

கனடாவிலும் வரலாற்றிலேயே இல்லாத அளவுக்கு மிக மோசமான காட்டுத் தீ சம்பவங்கள் நேரிட்டன. இந்த ஆண்டு தொடக்கத்தில் சிலி மற்றும் ஆஸ்திரேலியாவில் பற்றிய காட்டுத் தீயைத் தொடர்ந்து அங்கு பற்றி எரிந்த தீயில் 25 ஆயிரத்துக்கும் மேற்பட்ட நிலப்பரப்பிலான காடுகள் எரிந்து சாம்பலாகின.

அமெரிக்காவின் மேற்குப் பகுதிகளில் அண்மைக்காலங்களில் மிக அதிக அளவிலான காட்டுப் பகுதிகளில் தீ பற்றியெரிந்து பெரும் சேதங்களை ஏற்படுத்தியுள்ளது.

காலநிலை மாற்றமே இதுபோல் காட்டுத் தீ வேகமாகப் பரவுவதற்குக் காரணமாக அமைந்துள்ளது என விஞ்ஞானிகள் தொடர்ந்து எச்சரித்துவருகின்றனர்.

ஹவாய் தீவில் பெருமளவு காட்டுத் தீ பற்றி எரிவது இது ஒன்றும் முதல் முறை அல்ல. ஆனால் கடந்த சில தினங்களாக எரிந்துகொண்டிருக்கும் தீ வரலாற்றிலேயே இல்லாத அளவுக்கு மிகப் பயங்கரமான தீயாக உள்ளது.

இதுபோன்ற பயங்கர தீ விபத்து எப்படி, எங்கே தொடங்கியது என்பது குறித்து தெளிவான விவரங்கள் இதுவரை வெளியாகவில்லை.

சூறாவளிக் காற்றை எதிர்த்து தீ அணைப்பு வீரர்கள் கடுமையாகப் போராடி வருகின்றனர். இதில் பெரும்பகுதி தீ அணைக்கப்பட்டதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

அருகில் இருக்கும் பிக் தீவில் 3 இடங்களில் தீ பற்றியதாகவும், ஆனால் அவை அனைத்தும் முழுமையாகக் கட்டுப்படுத்தப்பட்டதாகவும் அதிகாரிகள் அறிவித்துள்ளனர்.

### ஹவாய் தீவின் வறண்ட வானிலை காரணமா?

தீ மளமளவெனப் பரவியதற்கு ஹவாய் தீவு முழுவதும் காணப்படும் வறண்ட வானிலையும் ஒரு காரணமாக அமைந்துள்ளது.

பொதுவாக காட்டுத் தீ பரவுவதற்கு சில விஷயங்கள் காரணமாக அமைந்துவிடுகின்றன. காட்டுப்பகுதியில் காணப்படும் வறண்ட புதர்கள், மரங்கள் மற்றும் இது போன்றவற்றில் தீ பற்றும்போது அது வேகமாகப் பரவுகிறது.

ஹவாயில் 14 சதவீத நிலப்பரப்பில் மோசமான அல்லது அதிகமான வறட்சி நிலவுகிறது என்றும், இதில் 80 சதவிகித நிலப்பரப்பு வழக்கத்திற்கு மாறான வறட்சியின் பிடியில் சிக்கித் தவிப்பதாகவும் அமெரிக்க வறட்சி கண்காணிப்பு அலுவலகம் அறிவித்துள்ளது.



வறண்ட வானிலை நிலவும்போது, பசுமையான செடி-கொடிகள் மற்றும் மரங்களில் இருக்கும் தண்ணீரை உறிஞ்சிக்கொள்வதால் அவற்றில் தீ எளிதில் பற்றிப் பரவுகிறது.

ஒரு நூற்றாண்டுக்கு முன்பு ஹவாய் தீயில் பெய்த மழை அளவுடன் ஒப்பிடும்போது தற்காலங்களில் 90 சதவிகிதம் குறைவாக அளவுக்குத் தான் மழைப்பொழிவு இருக்கிறது எனப் புள்ளி விவரங்கள் தெரிவிக்கின்றன. அதிலும் 2008ஆம் ஆண்டுக்குப் பிந்தைய வறட்சி நிலை மிகவும் மோசமாக இருந்து வருகிறது.

மாவி தீவிலும் கடும் வறட்சி காரணமாக சிவப்பு வண்ண எச்சரிக்கை விடுக்கப்பட்டிருந்தது. வெப்பமான காலநிலை, குறைந்த ஈரப்பதமான காற்று, சூறாவளிக் காற்று ஆகியவை இணைந்து தீ பற்றுவதற்கான ஆபத்தை அதிகரிக்கும் நிலை என்பதே இதன் பொருள்.

டோராவிலிருந்து பயங்கர சூறாவளிக்காற்று ஹவாய் தீவின் கடலோரப் பகுதிகளை கடந்த செவ்வாய் கிழமை கடந்து சென்றபோது அப்பகுதியில் எரிந்து வந்த தீ வேகமாகப் பரவியது.

அட்லாண்டிக் புயல் பருவத்திலும் இதேபோல் பயங்கர சூறாவளிக்காற்று வீசும் என வானிலை முன்னறிவிப்பு மையம் எச்சரித்துள்ளது.





ஈழநாடு



# பூமியை ஆட்டிப் படைக்கும் ஐந்தாவது புதிய சக்தி!

## அமெரிக்க விஞ்ஞானிகளின் புதிய கண்டுபிடிப்பு

ஏற்கெனவே பூமியை நான்கு சக்திகள் ஆட்டிப்படைப்பதாக நம்பப்பட்டு வரும் நிலையில், சிக்காகோ அருகே செயல்படும் பெர்மிலாப்பை சேர்ந்த விஞ்ஞானிகள் இயற்கையின் இன்னொரு புதிய சக்தி இருப்பதாக நம்பத் தொடங்கியுள்ளனர்.

துணை அணு இயற்பியலின் தற்போதைய கோட்பாட்டால் கணிக்கப்பட்டுள்ள வழியில் மியூயான்கள் எனப்படும் துணை அணுத் துகள்கள் செயல்படவில்லை என்பதற்கான கூடுதல் ஆதாரங்களை அவர்கள் கண்டறிந்துள்ளனர்.

அறியப்படாத சக்தி ஒன்று மியூயான்களில் செயல்படக்கூடும் என்று விஞ்ஞானிகள் நம்புகின்றனர்.

விஞ்ஞானிகளின் இந்த முடிவுகளை உறுதிப்படுத்த கூடுதல் தரவுகள் தேவைப்படும். ஆனால் அவை கிடைத்து விட்டால், அது இயற்பியலில் ஒரு புரட்சியின் தொடக்கத்தைக் குறிக்கும்.

ஒவ்வொரு நாளும் நாம் எதிர்கொள்ளும் அனைத்து சக்திகளையும் நான்கு வகைகளாகப் பிரிக்கலாம். ஈர்ப்பு விசை, மின்காந்தவியல், வலுவான மற்றும் பலவீனமான விசை. இந்த நான்கு அடிப்படை சக்திகள் பிரபஞ்சத்தில் உள்ள அனைத்து பொருட்களும், துகள்களும் எவ்வாறு ஒன்றோடொன்று தொடர்பு கொள்கின்றன என்பதை நிர்வகிக்கின்றன.

**புதிய புரட்சிக்கான தொடக்கமா?**

பெர்மிலாப் என்ற அமெரிக்க அரசுக்குச் சொந்தமான சோதனைக் கூடத்தில் இந்தப் புதிய கண்டுபிடிப்பு நிகழ்ந்துள்ளது. 2021இல் அறிவிக்கப்பட்ட முடிவுகளின் அடிப்படையில் இந்தப் புதிய கண்டுபிடிப்பு குறித்து அறிவிக்கப்பட்டுள்ளது. இதில் பெர்மிலாப் குழு முதலில் இயற்கையின் ஐந்தாவது சக்தியின் சாத்தியத்தைப் பரிந்துரைத்தது.

அப்போதிருந்து, ஆராய்ச்சி குழு அதிக தரவுகளைச் சேகரித்து, அவற்றின் அளவீடுகளின் நிச்சயமற்ற தன்மையை இரண்டு மடங்கு குறைத்து, உண்மைகளை வெளிப்படுத்தியுள்ளது என்று பெர்மிலாபின் மூத்த விஞ்ஞானி டாக்டர் பிரெண்டன் கேசி கூறுகிறார்.

“நாங்கள் உண்மையில் புதிய ஒரு விசயம் குறித்து ஆய்வு செய்து வருகிறோம். அளவீடுகளை இதுவரை கண்டிராததைவிட சிறந்த முறையில், துல்லியமாக நாங்கள் தீர்மானிக்கிறோம்,” என்கிறார் அவர்.

‘ஜி மைனஸ் டூ (ப-2)’ என்ற கவர்ச்சியான பெயருடன் ஒரு பரிசோதனையில் ஆராய்ச்சியாளர்கள் 15 மீற்றர் விட்டம் கொண்ட வளையத்தைச் சுற்றி மியூயான்கள் எனப்படும் துணை அணுத் துகள்களை வேகமாகப் பயணிக்க வைக்கின்றனர். அங்கு அவை ஒளியின் வேகத்தில் சுமார் 1,000 முறை சுழற்றப்படுகின்றன.

ஆனால், இயற்கையின் ஒரு புதிய சக்தியின் ஆதிக்கம் காரணமாக, வழக்கமான முறை என்று அழைக்கப்படும் தற்போதைய கோட்பாட்டால் விளக்க முடியாத அளவுக்கு அவை செயல்படலாம் என்று ஆராய்ச்சியாளர்கள் கண்டறிந்தனர்.


இந்த நம்பிக்கைக்கான ஆதாரங்கள் வலுவானவை என்றாலும், பெர்மிலாப் விஞ்ஞானிகள் குழு இதுவரை போதுமான அளவுக்கு உறுதியான ஆதாரம் கிடைக்கவில்லை என்கின்றனர்.

ஆனால், அதை இனிமேல் பெறமுடியும் என்று அவர்கள் நம்புகின்றனர். இருப்பினும், கோட்பாட்டு இயற்பியலின் வளர்ச்சி காரணமாக மியூயான்களில் வழக்கத்திற்கு மாறான செயல்பாட்டின் அளவு என்னவாக இருக்க வேண்டும் என்று நிலையான மாதிரி கூறுகிறது என்பதில் நிச்சயமற்ற தன்மை அதிகரித்துள்ளது.

சுருக்கமாகச் சொன்னால், இந்த சோதனை, இயற்பியல் விஞ்ஞானிகளுக்கு ஒரு குறிப்பிட்ட முன்னோக்கிய நகர்வை, ஒரு புரட்சிக்கான தொடக்கத்தை அளித்துள்ளது.

**கோட்பாடு - நடைமுறைக்கு இடையிலான இறுதி மோதல்**

விஞ்ஞானிகள் தமது இலக்கை அடைய தங்களுக்குத் தேவையான தரவுகள் கிடைக்கும் என்றும், இயற்பியல் கோட்பாட்டின் நிச்சயமற்ற தன்மை இரண்டு ஆண்டுகளில் போதுமான அளவுக்குக் குறைந்துவிடும் என்றும் நம்புகிறார்கள். ஐரோப்பாவின் லார்ஜ் ஹார்டன் கொலைடர் (Large Hadron Collider -LHC) என்ற ஒரு போட்டி ஆராய்ச்சிக் குழுவினரும் இந்த ஆராய்ச்சியில் முந்திச் செல்ல முயன்று வருகின்றனர்.



லண்டனின் இம்பீரியல் கல்லூரியைச் சேர்ந்த டாக்டர் மிதேஷ் பட்டேல், வழக்கமான நடைமுறைகளில் உள்ள குறைபாடுகளைக் கண்டறியும் முயற்சியில் எல்.எச்.சியின் ஆயிரக்கணக்கான இயற்பியலாளர்களில் ஒருவராக உள்ளார்.

அவர் பிபிசியிடம் பேசியபோது, நிலையான மாதிரிக்கு முரணான சோதனை முடிவுகளை முதலில் கண்டறிவது இயற்பியலில் எல்லா நேர முன்னேற்றங்களில் ஒன்றாக இருக்கும் என்று கூறினார்.

“வழக்கமான நடைமுறை கணிப்புகளுடன் உடன்படாத நடத்தையை அளவிடுவது நுண்துகள் இயற்பியலின் முக்கியப் புள்ளியாகும். இது 50 ஆண்டுகளுக்கும் மேலாக அனைத்து சோதனைகளையும் தாங்கி நிற்பதால், நமது புரிதலில் ஒரு புரட்சிக்கான தொடக்கமாக இருக்கும்.”

புதிய துகள்கள் அல்லது சக்திகளைக் கண்டறியக்கூடிய கோட்பாடு மற்றும் ஆராய்ச்சி நடைமுறைக்கு இடையிலான ‘இறுதி மோதலாக” இனிமேல் கிடைக்கவுள்ள முடிவுகள் இருக்கும் என்று பெர்மிலாப் கூறுகிறது.

**ஆராய்ச்சியில் கண்டறியப்பட்டது என்ன?**

வழக்கமான நடைமுறை என்றால் என்ன, அதற்கு மாறாகச் செயல்படுபவை குறித்த சோதனை முடிவுகளை பெறுவது ஏன் இவ்வளவு பெரிய விசயமாகக் கருதப்படுகிறது?

நம்மைச் சுற்றிலும் விரிந்து பரந்து கிடக்கும் உலகில் உள்ள அனைத்தும் அணுக்களால் ஆனவை. அவை கண்களுக்கே தெரியாத மிக நுண்ணிய துகள்களிலிருந்து உருவாக்கப்படுகின்றன. இவை ஒன்றுக்கொன்று செயல்பட்டு இயற்கையின் நான்கு சக்திகளை உருவாக்குகின்றன.

அதாவது மின்சாரம் மற்றும் காந்தவியல் (மின்காந்தம்), இரண்டு வகையான அணு ஆற்றல்கள் மற்றும் ஈர்ப்பு விசையை இந்த நுண்துகள்கள் உருவாக்குகின்றன.

அவற்றின் நடத்தை வழக்கமான நடைமுறையாகவே எப்போதும் உள்ளது என்பது மட்டுமல்ல, ஐம்பது ஆண்டுகளாக நடைபெற்ற சோதனைகளில் அவற்றின் நடைமுறைகளில் எந்த மாற்றமும் இல்லாமல் கச்சிதமாக செயல்பட்டுவருகின்றன.

மியூயான்களும் எலக்ட்ரான்களைப் போலவே அணுக்களை சுற்றிவருகின்றன. இருப்பினும் அவை எலக்ட்ரான்களைவிட 200 மடங்கு பெரியவை.

ஆனால், இந்தப் பரிசோதனையில் அவை சக்திவாய்ந்த கடத்திகளைப் பயன்படுத்தி வழக்கத்துக்கு மாறாகச் செயல்பட வைக்கப்பட்டன.

வழக்கமான நடைமுறையைத் தாண்டி, மியூயான்கள் மிக வேகமாக முறையற்ற செயல்பாடுகளைக் காட்டியது இந்த ஆராய்ச்சியில் கண்டறியப்பட்டுள்ளது.

இந்த ஆராய்ச்சிக் குழுவின் முன்னணி ஆராய்ச்சியாளர்களில் ஒருவரான லிவர்பூல் பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த பேராசிரியர் கிராசியானோ வெனான்சோனி, பிபிசியிடம் பேசியபோது, இதுபோன்ற வழக்கத்துக்கு மாறான நிகழ்வு என்பது இதுவரை கண்டறியப்படாத புதிய சக்தியால் ஏற்பட்டிருக்கக்கூடும் என்று கூறினார்.

**பிரபஞ்சம் பற்றிய புதிய செய்தி**

“இதுவரை நமக்குத் தெரிந்திராத வேறொரு சக்தி இருக்கக்கூடும் என்று நாங்கள் நம்புகிறோம். அது வித்தியாசமானது. அதை நாங்கள் ‘ஐந்தாவது சக்தி” என்று அழைக்கிறோம்.

“இது வித்தியாசமானது. இதுவரை நமக்குத் தெரியாத ஒன்று, ஆனால் அது முக்கியமானதாக இருக்க வேண்டும். ஏனென்றால், அது இந்த பிரபஞ்சத்தை பற்றி புதிதாக ஒரு செய்தியைக் கூறுகிறது.”

இந்த நம்பிக்கை உறுதி செய்யப்பட்டால், ஐன்ஸ்டீனின் சார்பியல் கோட்பாடுகளுக்குப் பிறகு நூறு ஆண்டுகளில் கிடைத்த மிகப்பெரிய அறிவியல் கண்டுபிடிப்பில் ஒன்றாக இது இருக்கும். ஏனென்றால், ஐந்தாவது விசை மற்றும் அதனுடன் தொடர்புடைய எந்தத் துகள்களும் ஏற்கெனவே நாம் அறிந்த துகள் இயற்பியலின் வழக்கமான நடைமுறைகளுடன் ஒத்துப்போகும் வகையில் இருக்காது.

“வழக்கமான நடைமுறைக்கு அப்பாற்பட்ட இயற்பியல்” என்று ஏன் இதைக் கருதவேண்டும் என்பதை விஞ்ஞானிகள் நன்கு அறிவார்கள். ஏனெனில், தற்போதைய கோட்பாடுகளின் அடிப்படையில், விண்வெளியில் ஆராய்ச்சியாளர்கள் கவனிக்கும் பல விஷயங்களை விளக்க முடியாது.

பிரபஞ்சத்தை உருவாக்கிய பெருவெடிப்புக்கு பிறகு விண்மீன் திரள்கள் விரிவடைவதைக் காட்டிலும் வேகத்தைத் தொடர்ந்து அதிகரித்து வருகின்றன. இந்த வேகம், இருண்ட ஆற்றல் எனப்படும் அறியப்படாத சக்தியால் முடுக்கிவிடப்படுவதாக விஞ்ஞானிகள் கூறுகின்றனர்.

விண்மீன் திரள்களும், அவை எவ்வளவு வேகமாகச் சுழல வேண்டும் என நாம் அறிந்துவைத்துள்ளதைவிட வேகமாகச் சுழல்கின்றன. கருந்துளை என்று அழைக்கப்படும் கண்ணுக்குத் தெரியாத இருண்ட பகுதியில் இருக்கும் துகள்கள் இதற்குக் காரணம் என்று ஆராய்ச்சியாளர்கள் நம்புகின்றனர்.

அந்தத் துகள்களும் வழக்கத்துக்கு மாறான நடைமுறைகளையே கொண்டுள்ளன.

பெர்மிலாப் எனப்படும் சோதனைக்கூடத்தில் மேற்கொள்ளப்பட்ட இந்த ஆராய்ச்சியின் முடிவுகள் ஜர்னல் பிசிகல் ரிவியூ லெட்டர்ஸில் வெளியிடப்பட்டுள்ளன.



# ஜீவனின் வயதை விட எனது அனுபவம் நீண்டது

## இராதகிருஷ்ணன் எம். பி.

கொழும்பு, ஓக. 14

தற்போதைய அமைச்சரின் (ஜீவன் தொண்டமான்) வயதைவிட, 32 வருட காலமுடைய தனது அரசியல் அனுபவம் நீண்டது என்று சுட்டிக்காட்டியுள்ளார் மலையக மக்கள் முன்னனியின் தலைவரும் தமிழ் முற்போக்கு கூட்டணியின் பிரதி தலைவருமான வே. ராதா கிருஷ்ணன்.

மலையகம் 200 என்ற நடைபவனியின் மக்கள் மத்தியில் கருத்து தெரிவிக்கும் போதே அவர் இதனை தெரிவித்தார்.

மேலும், நாட்டின் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை சந்திப்பதற்கு எமக்கும் அழைப்பு விடுக்கப்பட்டிருந்தது இருந்த போதிலும் தமிழ் முற்போக்கு கூட்டணி ஏற்பாடு செய்யப்பட்டிருந்த நடைபவனியின் நிகழ்வு காரணமாக நாங்கள் ஜனாதிபதியை சந்திக்கவில்லை. ஆனால், மலையகத்திலுள்ள சில அரசியல்வாதிகள் இதனை வைத்துக் கொண்டு எம்மை விமர்சித்து வருகிறார்கள்.

தங்களுக்கு வயதாகி விட்டதாகவும் காட்டுமிராண்டித்தனமாக நடந்து கொள்வதாக எம்மை குற்றம் சுமத்துகின்ற அமைச்சர் ஒன்றை தெளிவாக புரிந்து கொள்ள வேண்டும். அவருடைய தாத்தா 80 வயதில் இறந்திருந்தாலும்கூட மலையக மக்களுக்கு சிறந்த சேவையாற்றிய ஒரு தலைவர் முன்னாள் ஜனாதிபதி ஜே. ஆர் ஜெயவர்த்தன 80 வயதில் ஜனாதிபதி பதவியை வகித்தார். அதே போல் ரணில் விக்கிரமசிங்க 72 வயிதில் ஜனாதிபதியாக பதவியேற்றுள்ளார்.

அவருக்கு வயது உள்ளது என வாய்க்கு வந்த வார்த்தைகளை பிரயோகிப்பது ஒரு மனிதத்தன்மை அல்ல. ஆகவே, தன்னுடைய அருகதையை நினைத்துக் கொண்டு மற்றவர்களை விமர்சனம் செய்ய தெரிந்து கொள்ள வேண்டும்.

எதிர்வரும் ஜனாதிபதி தேர்தலில் ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவர் சஜித் பிரேமதாஸவை ஜனாதிபதியாக நியமித்து மலையக மக்களுக்கு பெரும் சேவையை முன்னெடுக்கவுள்ளோம் - என்றார். (ஐ)

# 60 வயதில் பட்டதாரியானார் ரஞ்சன் ராமநாயக்கா!



கொழும்பு, ஓக. 14

முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் ரஞ்சன் ராமநாயக்க இலங்கை திறந்த பல்கலைக் கழகத்தில் தனது பட்டப் படிப்பை பூர்த்தி செய்துள்ளார்.

பிரபல நடிகரும் அரசியல்வாதியுமான ரஞ்சன் ராமநாயக்க தனது இளைஞர் மற்றும் சமூக மேம்பாட்டில் பி. ஏ பட்டப்படிப்பை முடித்துள்ளதாக தனது அதிகாரப்பூர்வ பேஸ்புக் பதிவில் தெரிவித்துள்ளார். அவருக்கு வயது 60 என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

# 45 வருடகால பகைமை கொலையில் முடிந்தது!

கொழும்பு, ஓக. 14

கொலை ஒன்று தொடர்பில் 45 வருடங்களாக இருவரிடையே நிலவி வந்த பகைமை கொலையில் முடிந்துள்ளது.

கம்பளை, கொஸ்கொல்ல பிரதேசத்திலேயே இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது. இதில், அந்த இடத்தை சேர்ந்த லக்பெடி கெதர குணபால என்ற 73 வயதுடைய நபரே இவ்வாறு படுகொலையானார்.

குறித்த நபர் கம்பளை நகருக்குச் சென்றுவிட்டு நேற்றுமுன்தினம் இரவு வீடு திரும்பிக் கொண்டிருந்த போது, சந்தேகநபர் தனது வீட்டுக்கு அருகில் மறைந்திருந்து கத்தியால் தாக்கினார் என்று கூறப்படுகின்றது.

தாக்குதலில் படுகாயமடைந்த நபர் கம்பளை போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட நிலையில் உயிரிழந்தார். கொலை செய்யப்பட்டவர் சந்தேக நபரின் சகோதரியின் கணவர் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

கொலையானவர், சந்தேகநபரின் மூத்த சகோதரரை 45 வருடங்களுக்கு முன்னர் - 1978இல் கொல்லப்பட்டார். இதையடுத்து இருவரிடையேயும் பகைமை காணப்பட்டது. (ஐ)






# அரச உதவி திட்டத்தைப் பெறுவதற்கு தனி சிங்களத்தில் விண்ணப்ப படிவம்!

## அம்பாறை தமிழ் பேசும் மக்கள் சிரமம்

அக்கரைப்பற்று, ஓக. 14

**வெளிநாடுகளில் பணிபுரியும் தொழிலாளரின் பிள்ளைகளுக்கு உதவி வழங்கும் திட்டத்தைப் பெறுவதற்கு தனிச் சிங்களத்தில் மட்டும் விண்ணப்பப் படிவங்களை அம்பாறை மாவட்ட பிரதேச செயலகங்கள் வழங்குகின்றன. இதனால், தமிழ் பேசும் மக்கள் பெரும் சிரமங்களை எதிர்நோக்குகின்றனர். அத்துடன், அவர்களின் மொழி உரிமையும் மறுக்கப்பட்டுள்ளது.**

வெளிநாடுகளில் பணிபுரியும் தொழிலாளரின் பெற்றோரின் பாடசாலை செல்லும் பிள்ளைகளுக்கு ரூ. 10 ஆயிரம் பெறுமதியான பொதி வழங்கப்படுகின்றது. வெளிநாட்டு வேலை வாய்ப்பு பணியகத்தால் முன்னெடுக்கப்படும் இந்தத் திட்டத்துக்கான விண்ணப்பப் படிவங்களே தனிச் சிங்களத்தில் மட்டும் வழங்கப்பட்டு விநியோகிக்கப்படுகின்றது.

இவ்வாறு சிங்கள மொழியில் மட்டும் விநியோகிக்கப்படும் விண்ணப்பப்படிவங்களை பூர்த்தி செய்ய முடியாமல் தமிழ் பேசும் மக்கள் அலைந்து திரிகின்றனர்.

முன்னதாக, இந்தப் பிரதேச செயலகங்களில் தமிழ் மொழி மூலமான விண்ணப்பப்படிவங்கள் வழங்கப்பட்டிருந்தன. பின்னர், தமிழ் மொழி மூலம் வழங்கப்பட்ட விண்ணப்பப்படிவம் நிராகரிக்கப்படும் என கூறிக்கூறியே சில அலுவலகர்கள் தமிழ் மொழி பேசும் மக்களுக்கு தனிச் சிங்கள மொழி மூல விண்ணப்பப் படிவங்களை வழங்கி உடனடியாக பூர்த்தி செய்து தர வேண்டும் என வற்புறுத்தினர் என்று மக்கள் விசனம் தெரிவித்தனர்.

இந்த விடயம் குறித்து மனித உரிமை ஆணைக்குழு உள்ளிட்ட முக்கிய அதிகாரிகள் உரிய கவனம் செலுத்த வேண்டும் என்று பாதிக்கப்பட்ட மக்கள் கோரிக்கை விடுத்தனர். (ஐ)

# வீரமுனை மக்கள் படுகொலை; 33ஆவது ஆண்டு நினைவேந்தல்!



கல்முனை, ஓக. 14

வீரமுனை கிராமத்தில் கொல்லப்பட்ட 400இற்கும் அதிகமான அப்பாவி தமிழ் மக்களின் 33ஆவது ஆண்டு நினைவேந்தல் நேற்று முன்தினம் அனுஷ்டிக்கப்பட்டது.

பிள்ளையார் ஆலயத்தில் நடைபெற்ற ஆன்மசாந்திப் பூசையை தொடர்ந்து நினைவுத் தூபிக்கு முன்பாக அஞ்சலி நிகழ்வுகள் முன்னெடுக்கப்பட்டன.

போர் காலத்தில் சம்மாந்துறை பிரதேசத்தில் நிகழ்ந்த வன்செயல்கள் காரணமாக வீரமுனையையும் அதன் சுற்றுவட்டக் கிராமங்களான வீரச்சோலை, மல்லிகைத்தீவு,மல்வத்தை, வளத்தாப்பிட்டி, சொறிக்கல்முனை அம்பாறை பகுதிகளை சேர்ந்த மக்கள் தங்கள் வீரமுனை சிந்தா யாத்திரைப் பிள்ளையார் கோயிலிலும், வீரமுனை இராமகிருஷ்ண மிஷன் பாடசாலையிலும் தஞ்சமடைந்திருந்தனர். அங்கு சென்ற, இராணுவமும் முஸ்லிம் ஊர்காவல் படையும் 400இற்கும் மேற்பட்ட பொது மக்களை சுட்டும் வெட்டியும் கொன்றனர் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

# 13 விடயத்தில் முஸ்லிம் தலைவர்கள் தூரநோக்குடன் செயல்பட வேண்டும்!

## நாவலடி சம்பவத்தை காரணம் காட்டி இராஜாங்க அமைச்சர் ஹரிஸ் அறிக்கை

கொழும்பு, ஓக. 14

எமது முஸ்லிம் கட்சி தலைவர்கள் தற்போது பேசுபொருளாக மாறியுள்ள 13ஆம் திருத்தம் சம்பந்தமான விடயங்களில் நாவலடியில் சாணக்கியன் போன்றோர்கள் நடந்து கொள்ளும் விடயங்களை கவனத்தில் கொண்டு முஸ்லிம்களின் இருப்புக்கு நிலையானதும், ஆதரவானதுமான தூரநோக்கு சிந்தனை கொண்ட முடிவுகளை எடுக்க முன்வர வேண்டும்- என்று பாராளுமன்ற உறுப்பினரும் முன்னாள் இராஜாங்க அமைச்சருமான எச். எம். எம். ஹரிஸ் தெரிவித்துள்ளார்.

அண்மையில், நாவலடி பகுதியில் காடுகளை அழித்து - ஆக்கிரமித்து குடியேற முயன்ற முஸ்லிம் குடும்பங்கள் வெளியேற்றப்பட்டன. இது தொடர்பில் இராஜாங்க அமைச்சர் ஹரிஸ் வெளியிட்டுள்ள அறிக்கையிலேயே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அந்த அறிக்கையில்,

நாவலடியில் அத்துமீறி அடாவடித்தனமான முறையில் மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் இரா. சாணக்கியன் செயல்பட்டிருப்பது கண்டித்தக்கது. இவ்வளவு நாளும் பசுத்தோல் போர்த்திய புலியாக முஸ்லிங்களின் அநுதாபி போன்ற தோரணையில் செயல்பட்ட ஒருவர் பகிரங்கமாகவே முஸ்லிங்களுக்கு துரோகம் செய்யும் நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளார்.

இதன்மூலம் அவரின் சாயம் வெளுத்துள்ளது. ஏழை, எளிய மக்களின் காணியுரிமையை இல்லாமல் செய்கின்ற இந்த அத்துமீறிய நடவடிக்கையை ஏற்றுக் கொள்ள முடியாது. இந்த காணி விவகாரம் தொடர்பில் அரச உயர்மட்டங்களுக்கு எடுத்துச் சென்று மட்டக்களப்பு மாவட்ட முஸ்லிம்கள் எதிர்நோக்கும் அவலநிலையை அவர்களுக்கு விளக்கி தீர்வை கோர தயாராக உள்ளேன்.

அத்துடன், எமது முஸ்லிம் கட்சி தலைவர்கள் தற்போது பேசுபொருளாக மாறியுள்ள 13ஆம் திருத்தம் சம்பந்தமான விடயங்களில் நாவலடியில் சாணக்கியன் போன்றோர்கள் நடந்து கொள்ளும் விடயங்களை கவனத்தில் கொண்டு முஸ்லிம்களின் இருப்புக்கு நிலையானதும் ஆதரவானதுமான தூரநோக்கு சிந்தனை கொண்ட முடிவுகளை எடுக்க முன்வர வேண்டும்- என்றும் கூறியுள்ளார். (ஐ)

# ஐஸ் போதைப் பொருளுடன் திருமலையில் ஒருவர் கைது

திருகோணமலை, ஓக. 14

திருகோணமலையில் ஐஸ் போதைப்பொருளுடன் கைது செய்யப்பட்ட சந்தேகநபரை பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைத்து விசாரிக்குமாறு திருகோணமலை நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

பன்குளம் (மொறவெவ) பொலிஸ் நிலையத்துக்கு கிடைக்கப்பெற்ற இரகசிய தகவலை அடுத்து குறித்த சந்தேகநபரை சோதனையிட்ட போது அவரிடமிருந்து 11 கிராம் ஐஸ் போதைப்பொருள் கைப்பற்றப்பட்டதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இவ்வாறு கைது செய்யப்பட்டவர் அநுராதபுரம் - இக்கிரிகொல்லாவையை சேர்ந்த நபரே இவ்வாறு கைது செய்யப்பட்டார்.

திருகோணமலையிலிருந்து அநுராதபுரம் நோக்கி மோட்டார்சைக்கிளில் சென்று கொண்டிருந்தபோதே சந்தேகநபர் சிக்கியுள்ளார்.

இதனையடுத்து முன்னெடுக்கப்பட்ட விசாரணைகளின் அடிப்படையில் சந்தேகநபருக்கு பல நீதிமன்றங்களில் வழக்குகள் நிலுவையில் இருக்கின்றமை தெரியவந்ததையடுத்தே அவரை திருகோணமலை நீதிமன்றில் முன்னிலைப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. (ஐ)

# யானை தாக்கி ஒருவர் மரணம்!

மட்டக்களப்பு, ஓக. 14

குளத்தில் மீன்பிடிக்கச் சென்ற மீனவர் ஒருவர் யானை தாக்குதலுக்கு உள்ளாகி உயிரிழந்த நிலையில் சடலமாக நேற்று சடலமாக மீட்கப்பட்டார்.

கரடியனாறு - மரப்பாலம், புத்தம்புரிக் குளப் பகுதியில் நேற்று முன்தினம் இரவு இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இதில், மயிலவெட்டுவானை சேர்ந்த 42 வயதுடைய இராசமன்னன் தேவராசா என்பவரே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டார்.

குறித்த நபர் நேற்று இரவு படகில் மீன்பிடிக்கச் சென்றிருந்தார். அவர் வீடு திரும்பாத நிலையில், அவரை உறவினர்கள் தேடி சென்ற நிலையில் குளத்துக்கு அருகாமையில் யானை தாக்கி உயிரிழந்ததை கண்டனர்.

இது தொடர்பில் பொலிஸாருக்கு அறிவிக்கப்பட்டதைத் தொடர்ந்து சடலம் மீட்கப்பட்டு மருத்துவமனையில் ஒப்படைக்கப்பட்டது. (ஐ)

# கடலுக்கு சென்று மாயமான மீனவர் மீட்கப்பட்டார்!

திருகோணமலை, ஓக. 14

கடலுக்கு சென்று காணாமல் போன மீனவர் ஒருவர் இரு நாட்களின் பின்னர் மீன்பிடி படகு ஒன்றால் மீட்கப்பட்டுள்ளார்.

திருகோணமலை - பாட்டாளிபும் கிராமத்திலிருந்து தொழிலுக்காக கடலுக்குச் சென்ற உதுமாலெப்பை முஸ்தபா என்ற மீனவரே இவ்வாறு மீட்கப்பட்டார்.

கடந்த வெள்ளிக்கிழமை கடலுக்கு சென்ற இவர் சனிக்கிழமை திரும்பவில்லை. இதையடுத்து அவரைத் தேடும் பணிகள் முன்னெடுக்கப்பட்டன.

கடல் சீற்றம் காரணமாக படகின் நங்கூரம் அறுந்த நிலையிலும் எரிபொருள் தீர்ந்த நிலையிலும் அவர் கண்டுபிடிக்கப்பட்டார். மீன்பிடியில் ஈடுபட்டிருந்த ட்றோலர் படகு ஒன்றே அவரைக் காப்பாற்றியது.

உணவு, தண்ணீர் இன்மையாலும் கடல் சீற்றத்தால் உடலளவில் சோர்வடைந்த அந்த மீனவர் மூதூர் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார். (ஐ)

# வெளிநாடு அனுப்புவதாக மோசடி செய்தவர் கைது

மட்டக்களப்பு, ஓக. 14

வெளிநாட்டுக்கு வேலை வாய்ப்புக்கு அனுப்புவதாக சுமார் ஒரு கோடி ரூபாய் பண மோசடி செய்த ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

மட்டக்களப்பு அமிர்தகழி பிரதேசத்திலுள்ள போலி முகவர் ஒருவரின் வீட்டை நேற்று ஞாயிற்றுக்கிழமை கொழும்பில் இருந்து வந்த வேலைவாய்ப்பு பணியகத்தால் முற்றுகையிட்டு போலி முகவர் கைது செய்துள் ளார் என்று மட்டு. தலைமை யக பொலிஸார் தெரிவித்தனர்.

ஒருவரிடம் 4 இலட்சத்து 50 ஆயிரம் ரூபாய் வீதம் 22 பேரிடம் பணத்தை வாங்கிவிட்டு ஏமாற்றியுள்ளார்.

போலி முகவருக்கு எதிராக இருவர் கொழும்பு வேலை வாய்ப்பு பணியகத்தில் முறைப்பாடு செய்திருந்தனர். இதையடுத்தே குறித்த நபர் கைது செய்யப்பட்டார். (ஐ)

# ஹவாய் காட்டுத் தீ 89 சடலங்கள் மீட்பு!

## பலி எண்ணிக்கை மேலும் உயரலாம்

ஹவாய், ஒக. 14

**ஹவாயை உலுக்கிய காட்டுத் தீயால் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 89 ஆக அதிகரித்துள்ளது. இதேவேளை உயிரிழப்புகள் மேலும் அதிகரிக்கலாம் என அஞ்சுவதாக ஹவாய் ஆளுநர் தெரிவித்துள்ளார்.**

காட்டுத் தீயால் முற்றாக அழிந்துள்ள மவுயி நகரத்தில் தீயினால் உயிரிழந்தவர்களை அடையாளம் காண்பதற்கான தடயவியல் பரிசோதனைகள் நடைபெறுகின்றன.

தீயில் சிக்கிய நூற்றுக்கணக்கானோருக்கு என்ன நடந்தது என்பது தெரியாத நிலை தொடர்ந்தும் காணப்படுகின்றது.

இதேவேளை, அவசரநிலை காரணமாக ஏராளமானவர்கள் பாதுகாப்பான தங்குமிடங்களில் தங்கவைக்கப்பட்டுள்ளனர்.

காட்டுதீ பெருமளவுக்கு கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட்டுள்ளது. இந்நிலையில், முற்றாக அழிந்துபோன லகைனா நகரம் உட்பட சில பகுதிகளில் தீயை கட்டுப்படுத்துவதற்கான நடவடிக்கைகள் தொடர்கின்றன.

சுமார் ஆயிரம் பேரை இன்னமும் தொடர்புகொள்ள முடியாதநிலை காணப்படுவதாக தெரிவித்துள்ள சமஷ்டி அவசர முகாமைத்துவ முகவர் அமைப்பின் அதிகாரி ஜெரெமி கிறீன்



பேர்க் இவர்களில் பலர் பாதுகாப்பாக இருக்கலாம். ஆனால், அவர்களை சென்றடைவது கடினமாக உள்ளதாக குறிப்பிட்டுள்ளார்.

இதுவே ஹவாய் எதிர்கொண்ட மிகப்பெரிய இயற்கை அனர்த்தம் என மாநில ஆளுநர் தெரிவித்துள்ளார். அமெரிக்கா எதிர்கொண்ட மிகப்பெரிய இயற்கை அனர்த்தம் இதுவாக காணப்படலாம் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

லகைனாவில் சடலங்களை கண்டுபிடிக்கும் நடவடிக்கைகளில் மோப்ப நாய்கள் பயன்படுத்தப்படுகின்றன என்றும் அதிகாரிகள் தெரிவித்தனர். (ஐ)

# சீன நிறுவனங்களில் முதலிட அமெரிக்காவில் கட்டுப்பாடு!



வாஷிங்டன், ஒக. 14

சீன தொழில்நுட்ப நிறுவனங்களில் முதலீடு செய்வது தொடர்பாக அமெரிக்க நிறுவனங்களுக்கு அந்த நாட்டின் ஜனாதிபதி ஜோ பைடன் கட்டுப்பாடுகளை அறிவித்துள்ளார்.

புதிய உத்தரவின்படி, செமி கண்டக்டர், மைக்ரோ எலக்ட்ரானிக்ஸ், குவாண்டம் தொழில்நுட்பம், செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பம் உள்ளிட்ட சர்வதேச முக்கியத்துவம் வாய்ந்த துறைகளில் சீன நிறுவனங்களில் அமெரிக்க முதலீட்டாளர்கள் முதலீடு செய்வது தடை செய்யப்படும். மேலும், மற்ற துறைகளில் முதலீடு மேற்கொள்வதற்கு அமெரிக்க அரசின் ஒப்புதலைப் பெற வேண்டும்.

அமெரிக்க ஜனாதிபதியாக டொனால்ட் டிரம்ப் பதவி வகித்தபோது அமெரிக்காவுக்கும் சீனாவுக்கும் இடையிலான வர்த்தக உறவில் விரிசல் தீவிரமடைந்தது. 2021ஆம் ஆண்டு ஜோ பைடன் அமெரிக்க ஜனாதிபதியாக பொறுப்பேற்ற பிறகு இரு நாடுகள் இடையேயான வர்த்தக உறவு மேம்படும் என்று எதிர்பார்க்கப்பட்டது. இந்நிலையில், சீனாவுடனான வர்த்தக உறவிலிருந்து விலகும் வகையில் புதிய அறிவிப்பை ஜனாதிபதி பைடன் வெளியிட்டுள்ளார்.

உலகின் மிகப் பெரிய பொருளாதார நாடுகளின் வரிசையில் அமெரிக்காவுக்கு அடுத்த இடத்தில் சீனா உள்ளது. இந்தச் சூழலில், தற்போது சர்வதேச முக்கியத்துவம் பெற்றிருக்கும் செமி கண்டக்டர், மைக்ரோ எலக்ட்ரானிக்ஸ், குவாண்டம் தொழில்நுட்பம், செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பம் ஆகிய துறைகளில் சீன நிறுவனங்களில் அமெரிக்க முதலீட்டுக்கு கட்டுப்பாடுகள் கொண்டுவரப்பட்டுள்ளது. தேச பாதுகாப்பை கருத்தில் கொண்டு இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளதாக பைடன் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து ஜனாதிபதி பைடன் தரப்பினர் கூறுகையில், "அமெரிக்காவின் வளத்தையும், துறைசார் அறிவையும் பயன்படுத்தி சீனா தன்னுடைய தொழில்நுட்பம் மற்றும் இராணுவக் கட்டமைப்பை மேம்படுத்தி வருகிறது. இது அமெரிக்காவின் பாதுகாப்புக்கு ஆபத்து ஏற்படுத்தக் கூடியது. சீனாவின் தொழில்நுட்ப முன்னகர்வை தடுக்கும் நோக்கில் இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது" என்றனர்.

இந்தக் கட்டுப்பாடு அடுத்த ஆண்டு முதல் நடைமுறைக்கு வரும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்த நிர்வாக உத்தரவு குறித்து மக்கள் கருத்து தெரிவிக்க அவகாசம் வழங்கப்பட்டுள்ளது. (ஐ)



# வெடிகுண்டுப் புரளியால் மூடப்பட்டது ஈபிள் கோபுரம்!

பாரிஸ், ஒக. 14

வெடிகுண்டு புரளி காரணமாக பாரிஸ் நகரின் முக்கிய அடையாளமாகிய ஈபிள் கோபுரம் நேற்று முன்தினம்சுமார் மூன்று மணிநேரம் மூடப்பட்டது.

கோபுரத்தின் இடைத் தளங்களிலும் கீழேயும் நின்ற உல்லாசப் பயணிகள் அங்கிருந்து வெளியேற்றப்பட்டு குண்டு செயலிழக்கச் செய்யும் படைப் பிரிவினர் அங்கு சோதனைகளை மேற்கொண்டார்.

"இவ்வாறான சமயங்களில் இதுபோன்ற செயற்பாடு வழக்கமானது. ஆயினும் மிக அரிதானது" என்று இந்தசம்பவம் குறித்து கோபுரத்தை நிர்வகிக்கின்ற நிறுவனம் தெரிவித்தது.

நண்பகல் 12.30 மணியளவில் மூடப்பட்ட கோபுரம் பிற்பகல் 15.30 மணிக்குத் திறக்கப்பட்டது. வழக்கம்போல பயணிகள் அங்கு அனுமதிக்கப்பட்டனர்.

கடந்த 2020 ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதமும் இது போன்ற குண்டு மிரட்டல் காரணமாக கோபுரம் மூடப்பட்டிருந்தது.

கடந்த ஆண்டு மட்டும் உலகெங்கும் இருந்துவந்த 58 இலட்சம் பேர் ஈபிள் கோபுரத்தைப் பார்வையிட்டிருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

# நிலவை நோக்கி பயணிக்கிறது ரஷ்யாவின் லூனா -25 விண்கலம்!

## சந்திரயானை முந்தி தரையிறங்கும்?

மொஸ்கோ, ஒக. 14

ரஷ்யாவின் விண்வெளி முகமை, லூனா-25 என்ற விண்கலத்தை சந்திரனை நோக்கி வெற்றிகரமாக அனுப்பியுள்ளது. இது இந்தியாவின் சந்திரயானுக்கு முன்னதாக தென்துருவத்தில் தரையிறங்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இந்திய விண்வெளி ஆராய்ச்சி மையம் (இஸ்ரோ) சார்பில் ஆந்திர மாநிலம் சிறீ ஹரிகோட்டாவில் இருந்து எல். வி. எம்.-3 ஏவூர்தி மூலம் சந்திரயான்-3 விண்கலம் கடந்த ஜூலை 14ஆம் திகதி விண்ணில் ஏவியது. இது வரும் 23ஆம் திகதி நிலவின் தென்துருவத்தில் தரையிறங்கும்.

இந்நிலையில், ரஷ்யாவின் விண்வெளி முகமையான ராஸ்காமோஸ், வோஸ்டோக்னி காஸ்மோட்ரோம் ஏவுதளத்திலிருந்து லூனா-25 என்ற விண்கலத்தை சோயுஸ் 2.1பி ஏவூர்தி மூலம் நேற்றுமுன்தினம் விண்ணில் வெற்றிகரமாக செலுத்தியது.


கடந்த 1976ஆம் ஆண்டு ரஷ்யாவை உள்ளடக்கிய சோவியத் யூனியன் சார்பில் நிலவுக்கு விண்கலம் அனுப்பப்பட்டது. அதன் பிறகு 47 ஆண்டுகளுக்குப் பிறகு ரஷ்யா சார்பில் முதன் முறையாக நிலவுக்கு விண்கலம்



அனுப்பப்பட்டுள்ளது.

லூனா-25 விண்கலம் வரும் 16ஆம் திகதி நிலவின் சுற்றுவட்டப்பாதையை அடையும் என எதிர்பார்க்கப்படுகிறது. அதன் பிறகு நிலவின் சுற்று வட்டப்பாதையை சுற்றி வரும் லூனா-25, வரும் 23ஆம் திகதி நிலவின் தென்துருவத்தில் தரையிறங்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. குறிப்பாக இந்தியாவின் சந்திரயான் விண்கலத்துக்கு முன்னதாகவே தரையிறங்கும் என கூறப்படுகிறது.

இதுகுறித்து ராஸ்காஸ்மோஸ் வெளியிட்ட அறிக்கையில், "நிலவில் விண்கலத்தை தரையிறக்கும் திறன் ரஷ்யாவுக்கு உள்ளது என்பதை பறைசாற்றவும் நிலவின் தரைப்பரப்பில் ரஷ்யாவாலும் கால்பதிக்க முடியும் என்பதை உறுதி செய்யவுமே லூனா-25 அனுப்பப்பட்டுள்ளது" என தெரிவித்துள்ளது. (ஐ)



### மொன்றியல் ஒப்பன் ரென்னிஸ்:

# அல்கராஸ், மெத்வதேவ் காலிறுதியில் தோல்வி!

மொன்றியல், ஓக. 14

மொன்றியல் ஒப்பன் ரென்னிஸ் தொடரில் தொடரில் முதல் நிலை வீரரான ஸ்பெயினின் கார்லோஸ் அல்கராஸ் காலிறுதி சுற்றில் தோல்வி அடைந்தார்.

கனடாவின் மொன்றியல் நகரில் நடைபெற்று வரும் இந்த தொடரின் ஆண்களுக்கானஒற்றையர் பிரிவு காலிறுதி சுற்றில் முதல் நிலை வீரரான ஸ்பெயினின் கார்லோஸ் அல்கராஸ் போட்டித் தரவரிசையில் 12ஆவது இடத்தில் உள்ள அமெரிக்காவின் ரொம்மி போலுடன் மோதினார்.

இதில் கார்லோஸ் அல்கராஸ் 3-6, 6-4, 3-6 என்ற செற் கணக்கில் அதிர்ச்சி தோல்வி அடைந்தார்.

இதேநேரம், அவுஸ்திரேலியாவின் அலெக்ஸ் டி மினார் 7-6 (9-7), 7-5 என்ற செற் கணக்கில் போட்டித் தரவரிசையில் 2ஆவது இடத்தில் ரஷ்யாவின் டேனியல் மேத்வதேவையும் வீழ்த்தி அரை இறுதி சுற்றில் கால்பதித்தார்.



# உலகக் கிண்ண உதைபந்து; ஆஸி. அரையிறுதிக்கு தகுதி

பிரிஸ்பர்ன், ஓக. 14

பிபா மகளிர் உலகக் கிண்ண உதைபந்தாட்ட தொடரின் காலிறுதி போட்டியில் அவுஸ்திரேலிய அணி சமநிலை தவிர்ப்பு உதையில் 7-6 என்ற கோல் கணக்கில் பிரான்ஸ் அணியை வீழ்த்தி அரையிறுதிக்கு முன்னேறியது.

மகளிர் உலகக் கிண்ண உதைபந்து வரலாற்றில் அவுஸ்திரேலிய அணி அரையிறுதிக்கு தகுதி பெறுவது இதுவே முதன் முறையாகும்.

பிபா மகளிர் உலகக் கிண்ண உதைபந்து தொடரின் காலிறுதி போட்டியில் நேற்று முன்தினம் அவுஸ்திரேலியா - பிரான்ஸ் அணிகள் பிரிஸ்பன் மைதானத்தில் மோதின.

நிர்ணயிக்கப்பட்ட 90 நிமிடங்களில் இரு அணிகள் தரப்பில் கோல் ஏதும் அடிக்கவில்லை. இதனால், கூடுதல் நேரம் வழங்கப்பட்டது. இதன் 10ஆவது நிமிடத்தில் பிரான்ஸ் அணிக்கு கோர்ணர்வாய்ப்பு கிடைத்தது.

இதில் விக்கி பெச்சோ உதைத்த பந்தை அவுஸ்திரேலிய அணியின் தடுப்பாட்டக்காரர் அலன்னா கென்னடி தடுக்க முயன்றபோது அவரின் தலையில் பட்டு சுயகோலாக மாறியது. ஆனால் கள நடுவர் மரியா கார்வஜல் இந்த கோலை மறுத்தார். இதற்கு காரணம் அலன்னா கென்னடியின் பின்புறம் நின்ற அவுஸ்திரேலிய அணியின் முன்கள வீராங்கனையான கெய்ட்லின் போர்டின் ஜெர்சியை பிரான்ஸ் அணித் தலைவர் வெண்டி ரெனார்ட் பிடித்து இழுத்து கீழே தள்ளியதுதான்.

சுயகோல் அடித்த அதிர்ச்சியில் இருந்த அவுஸ்திரேலிய அணி, நடுவரின் முடிவால் பெருமூச்சு விட்டது. இதன் பின்னர் இரு அணிகள் தரப்பில் கோல் அடிக்க மேற்கொண்ட முயற்சிகளுக்கு பலன் கிடைக்கவில்லை. கூடுதல் நேரங்களின் முடிவிலும் கோல் அடிக்கப்படாததால் ஆட்டம் 0 - 0 என்ற நிலையில் இருந்தது. இதையடுத்து வெற்றியை தீர்மானிக்க சமநிலை தவிர்ப்பு உதை கடைபிடிக்கப்பட்டது.

இதில் 5 வாய்ப்புகளில் இரு அணிகளும் தலா 4 கோல்கள் அடித்தன. இதையடுத்து, மீண்டும் சந்தர்ப்பம் அளிக்கப்பட்டது. இதில் இரு அணிகளும் அடுத்தடுத்து தொடர்ச்சியாக கோல்கள் அடித்தன. அடுத்த சந்தர்ப்பத்தில் அவுஸ்திரேலியா கோல் அடிக்க பிரான்ஸ் தவறவிட்டது. இதைத் தொடர்ந்து அவுஸ்திரேலியா 7-6 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்று அரையிறுதி சுற்றுக்கு முன்னேறியது.

# மேற்கிந்தியத் தீவுகள் அணியை இலகுவாக வீழ்த்தியது இந்தியா!

ஜமைக்கா, ஓக. 14

மேற்கு இந்திய தீவுகள் அணிக்கு எதிரான 4ஆவது இருபது - 20 போட்டியில் இந்திய அணி வெற்றிபெற்றுள்ளது. 179 ஓட்டங்கள் இலக்கை துரத்திய இந்திய அணி ஒரு விக்கெட்டை மட்டும் இழந்து வெற்றிபெற்றது.

இந்தியா, மேற்கு இந்திய தீவுகள் அணிகள் இடையேயான 4ஆவது இருபது - 200 போட்டி ப்ரோவர்ட் கவுண்டி மைதானத்தில் நடைபெற்றது.

இதில் நாணயச் சுழற்சியில் வென்ற மேற்கு இந்திய தீவுகள் அணி முதலில் துடுப்பெடுத்தாடியது. நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவரில் 8 விக்கெட்களை இழந்து 178 ஓட்டங்கள் சேர்த்தது. அந்த அணியின் ஷிம்ரன் ஹெட்மேயர் அதிரடியாக ஆடி 39 பந்தில் 61 ஓட்டங்களை குவித்தார். ஷாய் ஹோப் 45 ஓட்டங்கள் எடுத்தார்.

இந்தியா சார்பில் அர்ஷ்தீப் சிங் 3 விக்கெட்களும், குல்தீப் யாதவ் 2 விக்கெட்களும், சஹால், அக்சர் படேல், முகேஷ் குமார் தலா ஒரு விக்கெட்டும் வீழ்த்தினர்.

179 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் களமிறங்கிய இந்திய அணி அசத்தலான ஆட்டத்தை வெளிப்படுத்தியது. தொடக்க வீரர்கள் ஜெய்ஸ்வால் மற்றும் ஷூப்மன் கில் அதிரடியாக ஆடினர்.



இருவரும் அதிவேகமாக ஓட்டங்களை உயர்த்தியதுடன் அடுத்தடுத்து அரைசதம் பதிவு செய்தனர். 165 ஓட்டங்களை சேர்த்த பிறகே இந்தியா முதல் விக்கெட்டை பறிகொடுத்தது.

77 ஓட்டங்கள் எடுத்த நிலையில் ஷூப்மன் கில் முதல் விக்கெட்டாக வெளியேறினார். எனினும் ஜெய்ஸ்வால் மற்றும் திலக் வர்மா இணைந்து அணியை வெற்றி பாதைக்கு அழைத்து சென்றனர். இறுதியில், இந்தியா ஒரு விக்கெட் இழப்புக்கு 179 ஓட்டங்களை எடுத்து வெற்றிபெற்றது. ஜெய்ஸ்வால் 84 ஓட்டங்கள் எடுத்து ஆட்டமிழக்காமல் இருந்தார். (ஐ)

### எல். பி. எல். தொடர்

# பி லவ் கண்டி அணியிடம் ஜெவ்னா கிங்ஸ் தோல்வி



பல்லேகலை, ஓக. 14

ஜெவ்னா கிங்ஸ் அணியை 8 ஓட்டங்களால் வெற்றி கொண்டது பி லவ் கண்டி அணி.

எல். பி. எல் என்று அழைக்கப்படும் லங்கா பிறீமியர் லீக்கின் இந்தப் பருவத்தில் ஜெவ்னா கிங்ஸ் எதிர்கொண்ட மூன்றாவது தோல்வி இதுவாகும்.

இந்தப் போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய பி லவ் கண்டி 20 ஓவர்களில் 8 விக்கெட்களை இழந்து 178 ஓட்டங்களைப் பெற்றது.

மொஹமத் ஹரிஸ், பக்கார் ஷமான் ஆகியோர் 33 பந்துகளில் 51 ஓட்டங்களைப் பகிர்ந்து சிறந்த ஆரம்பத்தை இட்டுக்கொடுத்தனர்.

திறமையாகத் துடுப்பெடுத்தாடிய பக்கார் ஷமான் 22 ஓட்டங்களுடன் ஆட்டம் இழந்ததும் தினேஷ் சந்திமால் (1), சஹான் ஆராச்சிகே (2) ஆகியோர் ஒற்றை இலக்கங்களுடன் வெளியேறினர்.

எனினும் மொஹமத் ஹரிஸ், ஏஞ்சலோ மெத்யூஸ் ஆகிய இருவரும் 4ஆவது விக்கெட்டில் 43 பந்துகளில் 75 ஓட்டங்களைப் பகிர்ந்து அணியைப் பலப்படுத்தினர்.

அதிரடியாகத் துடுப்பெடுத்தாடிய மொஹமத் ஹரிஸ் 52 பந்துகளில் 10 பௌண்ட்ரிகள், 2 சிக்ஸர்களுடன் 81 ஓட்டங்களைப் பெற்று ஆட்டம் இழந்தார்.

மொத்த எண்ணிக்கைக்கு மேலும் 13 ஓட்டங்கள் சேர்ந்த போது அஞ்சலோ மத்தியூஸ் 22 ஓட்டங்களுடன் களம் விட்டகன்றார்.

அணித் தலைவர் வனிந்து ஹசரங்க ஒரு பௌண்ட்ரி, ஒரு சிக்ஸருடன் அதிரடி ஆட்டத்தை வெளிப்படுத்திய போதிலும் 19 ஓட்டங்களுடன் ஆட்டம் இழந்தார்.

தொடர்ந்து அசிப் அலி (6), இசுறு உதான (9) ஆகிய இருவரும் குறைந்த ஓட்டங்களுடன் ஆட்டம் இழந்தனர்.

பந்துவீச்சில் நுவன் துஷார 31 ஓட்டங்களுக்கு 3 விக்கெட்களையும் டில்ஷான் மதுஷங்க 31 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்களையும் துனித் வெல்லாலகே 43 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்களையும் கைப்பற்றினர்.

179 ஓட்டங்களை வெற்றி இலக்காகக் கொண்டு பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய ஜெவ்னா கிங்ஸ் முதல் 5 ஓவர்களுக்குள் 3 விக்கெட்களை இழந்து 16 ஓட்டங்களை மாத்திரம் பெற்றிருந்தது.

இந்த 3 விக்கெட்களையும் அஞ்சலோ மத்தியூஸ் தனது முதல் 3 ஓவர்களில் ஒவ்வொரு விக்கெட்டாக வீழ்த்தியிருந்தார்.

ரஹ்மானுல்லா குர்பாஸ் (1), நிஷான் மதுஷ்க (8), சரித் அசலன்க (2) ஆகிய 3 முன் வரிசை வீரர்களும் ஒற்றை இலக்க எண்ணிக்கைகளுடன் நடையைக் கட்ட அணி பெரும் நெருக்கடிக்குள்ளானது.

சொகைப் மாலிக் 4ஆவது விக்கெட்டில் கிறிஸ் லின்னுடன் 35 ஓட்டங்களையும், 5ஆவது விக்கெட்டில் டேவிட் மில்லருடன் 39 ஓட்டங்களையும் 6ஆவது விக்கெட்டில் திசர பெரேராவுடன் 60 ஓட்டங் களையும் பகிர்ந்து ஜெவ்னா கிங்ஸுக்கு தெம்பூட்டினார். ஆனால், திஸர பெரேரா ஆட்டம் இழந்ததும் ஜெவ்னா கிங்ஸின் வெற்றி வாய்ப்பு நழுவியது.

கிறிஸ் லின் 27 ஓட்டங்களையும் டேவிட் மில்லர் 24 ஓட்டங்களையும் திஸர பெரேரா 36 ஓட்டங்களையும் பெற்றனர்.

சொகைப் மாலிக் 55 ஓட்டங்களுடனும் துனித் வெல்லாலகே 6 ஓட்டங்களுடனும் ஆட்டம் இழக்காதிருந்தனர்.

பந்துவீச்சில் அஞ்சலோ மத்தியூஸ் 3 ஓவர்களில் 10 ஓட்டங்களுக்கு 3 விக்கெட்களையும் நுவன் ப்ரதீப் 48 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்களையும் கைப்பற்றினர்.

(ஐ)

# சதிப் புரட்சியின் மூலம் ஆட்சியை கவிழ்க்க சதி!

## ஜே. வி. பியை சாடுகிறார் ஜனாதிபதி

கொழும்பு, ஓக. 14

**நாட்டில் அமைதியின்மையை ஏற்படுத்தி பொதுமக்களை வன்முறையாளர்களாக்கி ஆட்சி கவிழ்ப்பு சதியில் மக்கள் விடுதலை முன்னணி (ஜே.வி.பி) தலைமையிலான குழு ஈடுபட்டுள்ளது. இதன் பின்னணியில் பிரபல ஊடகம் ஒன்றும் இருக்கிறது என்று ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க தெரிவித்துள்ளார்.**

ஆளும் கட்சி கூட்டத்தில் இந்த விடயங்களை தெரிவித்த ஜனாதிபதி, அரச கவிழ்ப்பு சதி தொடர்பான புலனாய்வு அறிக்கை மற்றும் காணொலி ஆதாரங்களையும் வெளியிட்டார் என்று தெரிவிக்கப்பட்டது.

மேலும் இந்த சதித் திட்டம் தொடர்பில் நடவடிக்கைகளை முன்னெடுக்க விசேட பாராளுமன்ற தெரிவுக்குழுவை நிறுவவுள்ளார் என்றும் கூறினார்.

மேலும், நாட்டில் காணப்படும் வறட்சியை அடிப்படையாக கொண்டு குறிப்பிட்ட ஓர் அரசியல் கட்சியும் பிரபல ஊடகம் ஒன்றும் வன்முறைகள் ஊடாக ஆட்சி கவிழ்ப்பு சதியை முன்னெடுத்து வருகின்றன. கடந்த ஆண்டை போன்று மக்களை வன்முறையாளர்களாக்கி வீதியில் இறக்கி அரச எதிர்ப்பு போராட்டங்களை முன்னெடுக்க முயற்சிகள் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

இந்த வன்முறை போராட்டங்களின் இறுதி இலக்கு ஆட்சி கவிழ்ப்பு சதியாகும். இதனை மக்கள் விடுதலை முன்னணி தலைமையிலான குழுவே முன்னெடுக்கின்றது. சதித்திட்டத்துக்கான ஆதாரங்கள் கிடைக்கப்பெற்றுள்ளன. புலனாய்வு அறிக்கைகளும் உறுதிப்படுத்தியுள்ளன. இந்த காணொலி ஆதாரங்களை அவதானியுங்கள். ஆதாரங்களை உள்ளடக்கிய அறிக்கையையும் பாருங்கள். மீண்டும் நாட்டை வன்முறைக்குள் கொண்டுச் செல்ல இடமளிக்க முடியாது.

எனவே ஜே. வி. பியின் ஆட்சி கவிழ்ப்பு சதி குறித்து கவனத்தில் கொள்ள விசேட பாராளுமன்ற தெரிவுக்குழுவை எதிர்வரும் நாட்களில் நியமிக்க உள்ளேன். பாதுகாப்பு தரப்புகளுக்கும் உத்தரவுகள் பிறப்பிக்கப்பட்டுள்ளது. கடுமையான பொருளாதார நெருக்கடிகளிலிருந்து நாடு தற்போது ஒரு சுமுகமான நிலைக்கு வந்துள்ளது. பொருளாதார மறுசீரமைப்புகள் சிறப்பாக முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. மக்களின் முழுமையான ஒத்துழைப்புகள் பொருளாதார மறுசீரமைப்புகளுக்கு கிடைத்துள்ளன. பல வேறு மக்கள் நலசார்ந்த திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. தேசிய இனப்பிரச்னைக்கு தீர்வு கண்டு, அனைத்து வழிகளிலும் நாட்டை முன்னோக்கி கொண்டுச் செல்ல முயற்சிகளை முன்னெடுத்துள்ளேன்.

இவற்றை சீரழித்தும் நாட்டின் அமைதியை சீர்குலைக்கவுமே முயற்சிகள் முன்னெடுக்கப்படுகின்றன. வறட்சியை காரணம் காட்டி மக்களை வன்முறைக்குள் தள்ளுவதற்கு இடமளிக்க முடியாது. விவசாயத்துக்குத் தேவையான நீரை பெற்றுக்கொடுக்க நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. விவசாய நடவடிக்கைகளுக்கு என கூறி சமனல குளத்திலிருந்து ஒரு மாதத்திற்கு முன்பதாகவே தண்ணீர் விடுவிக்கப்பட்டுள்ளது. இது திட்டமிட்டதொரு செயல்பாடாகும் - என்றும் கூறினார். (ஐ)

# துப்பாக்கிசூட்டில் இளைஞர் மரணம்

கொழும்பு, ஓக. 14

நீர்கொழும்பில் நேற்று முன்தினம் காலை இடம்பெற்ற துப்பாக்கி சூட்டில் காயமடைந்தவர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார்.

நீர்கொழும்பு, துங்கல்பிட்டிய - லெல்லம பிரதேசத்தில் இந்தத் துப்பாக்கி சூடு இடம்பெற்றது.

மோட்டார் சைக்கிளில் வந்த இருவர் இந்தத் துப்பாக்கி சூட்டை நடத்தி விட்டு தப்பிச் சென்றனர்.

இதில் காயமடைந்த 25 வயது இளைஞர் நீர்கொழும்பு மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார். எனினும், அவர் அங்கு சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார்.

பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ஐ)

# கோதுமை மா இறக்குமதிக்கு அரசு அனுமதிக்க வேண்டும்

## இறக்குமதியாளர் கோரிக்கை

கொழும்பு, ஓக. 14

விரைவில் கோதுமை மாவை இறக்குமதி செய்ய வேண்டியுள்ளதாக புறக்கோட்டை கோதுமை இறக்குமதியாளர்கள் தெரிவிக்கின்றனர்.

இறக்குமதி மற்றும் ஏற்றுமதி கட்டுப்பாட்டு திணைக்களத்தால் கடந்த 16 ஆம் திகதி முதல் கோதுமை மா இறக்குமதி முற்றாக தடை செய்யப்பட்டுள்ளது. இறக்குமதி செய்யப்பட்ட கோதுமை மாவின் கையிருப்பு தீர்ந்து வருவதால் கோதுமை மா இறக்குமதிக்கு அனுமதி வழங்குமாறு அரசாங்கத்திடம் கோரிக்கை விடுத்துள்ளனர்.

கோதுமை மா இறக்குமதியை நிறுத்துவதன் மூலம் நாட்டில் கோதுமை மா உற்பத்தி செய்யும் இரு நிறுவனங்களினதும் கை ஓங்கியுள்ளதாக சுட்டிக்காட்டியுள்ள அவர்கள், இதன் காரணமாக எதிர்காலத்தில் கோதுமை மாவின் விலை அதிகரிக்கும் எனவும் தெரிவிக்கின்றனர்.

துருக்கியில் இருந்து இறக்குமதி செய்யப்பட்ட இந்த கோதுமை மாவின் மொத்த விலை 180 ரூபாவாகவும், இந் நாட்டின் இரண்டு நிறுவனங்களின் ஒரு கிலோ மாவுக்கான விலை 200 ரூபாயாகவும் உள்ளது என்றும் சுட்டிக்காட்டப்பட்டது. (ஐ)

# 6 மாதங்களில் மட்டும் நாட்டில் 40 துப்பாக்கி சூட்டு சம்பவங்கள்

கொழும்பு, ஓக. 14

நாட்டில் கடந்த 6 மாதங்களில் மட்டும் 40 துப்பாக்கி சூட்டு சம்பவங்கள் பதிவாகியுள்ளன.

இந்தத் துப்பாக்கி சூட்டு சம்பவங்களில் 23 பேர் உயிரிழந்தனர். 17 பேர் காயமடைந்துள்ளனர்.

போதைப்பொருள் வர்த்தகம், பாதாளக் குழு செயல்பாடுகளில் ஈடுபடும் தரப்பினருக்கு இடையிலான முரண்பாடுகள் - ஒப்பந்த கொலைகள் போன்றன இந்த துப்பாக்கி சூட்டு சம்பவங்களுக்கு காரணமாக அமைந்துள்ளன என்று பொலிஸார் தெரிவித்தனர்.

# லக்ஷ்மனின் பாடங்களிலிருந்து இலங்கையை உருவாக்குவோம்

## அமைச்சர் அலி சப்ரி

கொழும்பு, ஓக. 14

முன்னாள் வெளிவிவகார அமைச்சர் அமரர் லக்ஷ்மன் கதிர்காமரின் வாழ்க்கையிலிருந்து நாம் கற்றுக் கொண்ட பாடங்களை பிரதிபலிக்கும் இலங்கையை உருவாக்குவோம் என வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி தெரிவித்துள்ளார்.

முன்னாள் வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் சுட்டுக்கொல்லப்பட்டு 18 வருடங்களாகியுள்ளன. அவரை நினைவுகூர்ந்து அமைச்சர் அலி சப்ரி தனது ருவிற்றரில் இட்ட பதிவிலேயே மேற்கண்டவாறு கூறினார்.



“அனைத்து இலங்கையரினதும் பொதுவான நோக்கத்துக்கான லக்ஷ்மன் கதிர்காமரின் அசைக்க முடியாத அர்ப்பணிப்பு, ஐக்கியத்தை ஏற்படுத்துவதற்கான அவரின் அயராத முயற்சிகள் எமது தேசத்தின் வரலாற்றில் ஓர் அழியாத தடத்தை பதித்துள்ளன” என்று குறிப்பிட்டுள்ளார். (ஐ)

# ஊழல்வாதிகளை திருடரெனக்கூற முதுகெலும்பு இருக்க வேண்டும்!

## சரத் பொன்சேகா எம். பி.

கொழும்பு, ஓக. 14

ஊழல் அற்ற நாட்டில் மக்களுக்கு வாழும் வாய்ப்பை ஏற்படுத்த வேண்டும். ஊழலுடன் தொடர்புடைய ஒருவரை நேரில் சந்திக்கும்பட்சத்தில் திருடர் எனக் கூறும் அளவுக்கு நாட்டு மக்களுக்கு முதுகெலும்பு இருக்க வேண்டும் என ஐக்கிய மக்கள் சக்தியின் தவிசாளரும் பாராளுமன்ற உறுப்பினருமான பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா தெரிவித்துள்ளார்.

மாற்றத்தை விரும்பும் தலைவர்களை அடையாளம் காணுவோம் எனும் தொனிப்பொருளில் கொழும்பு, விஹாரமகா தேவி பூங்காவில் இடம்பெற்ற எதிர்ப்பு போராட்டத்தில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

நாட்டு மக்கள் வழங்குவதை உண்டு வாயை மூடிக்கொண்டு இருக்க வேண்டும் என நினைக்கிறார்கள். 70 வீதமானவர்கள் ஏழைகளாகவே இருக்கின்றனர். இவர்கள் கூறுவதைப் போன்று செயல்படும் பட்சத்தில் அரசியல்வாதிகளின் பின்னால் சென்று பிள்ளைகளை அரச பாடசாலைகளுக்கு அனுப்ப நேரிடும்.



தமக்கான தொழிலை பெற்றுக் கொள்ள வேண்டிட ஏற்படும். எம்மை சுற்றியுள்ள பொலிஸாருக்கும், மக்களுக்கும் இது சகல விதத்திலும் பொருந்தும். முதலில் மக்களை தெளிவுபடுத்த வேண்டும். ஊழலுடன் தொடர்புடைய அரசியல்வாதிகளை புறக்கணிக்க வேண்டும்.

ஊழல் அற்ற நாட்டில் மக்களுக்கு வாழும் வாய்ப்பை ஸ்தாபிக்க வேண்டும். ஊழலை ஒழிக்காமல் பொருளாதாரத்தை கட்டியெழுப்பி நாட்டை ஸ்திரப்படுத்த முடியும் என எவ்வாறு கூக்குரலிட்டாலும் பொருளாதாரத்தை முன்னோக்கி கொண்டு செல்ல முடியாது.

மேலும் பணவீக்கம் சரி எனவும் நாடு வழமைக்கு திரும்பியுள்ளதாகவும் அரசியல்வாதிகள் தற்போது காண்பிக்க முயற்சிக்கின்றனர்.

ஊழலை ஒழிக்காமல் நாட்டில் எவருக்கும் சுதந்திரமாக வாழ்வதற்கு வாய்ப்பு கிடைக்காது. ஊழலுடன் தொடர்புடைய ஒருவரை நேரில் சந்திக்கும் பட்சத்தில் திருடர் என கூறும் அளவுக்கு நாட்டு மக்களுக்கு முதுகெலும்பு இருக்க வேண்டும். அவ்வாறு ஒன்று திரளுமாறு நாம் பொதுமக்களிடத்தில் கோரிக்கை விடுக்கிறோம். மேலும் கட்சியை பிரதிநிதித்துவப்படுத்தி இந்த போராட்டத்தில் நான் பங்கு கொள்ளவில்லை. இது எனது தனிப்பட்ட போராட்டம்.

இந்த போராட்டத்தில் எந்த ஒரு கட்சியை சார்ந்த எந்த ஒரு நபருக்கும் கலந்து கொள்ள முடியும். இருப்பினும் அவர் மீது மக்களிடத்தில் நம்பிக்கை இருக்க வேண்டும்.

ஊழல், திருட்டு என்பவற்றை மேற்கொள்ளாதவராக இருக்க வேண்டும். குறிப்பிட்ட காலம் இதில் இருந்து விட்டு பிறகு மற்றொன்றுக்கு குதிக்கும் நபராக இருந்தால் எம்மால் அவ்வாறான தரப்பினரை ஏற்றுக்கொள்ள முடியாது - என்றார். (ஐ)

## இலங்கை...

ஆலோசனையை நாங்கள் மதிப்பாய்வு செய்துள்ளோம். எங்கள் ஆலோசனையின் அளவை நாங்கள் மாற்றவில்லை, இலங்கை செல்பவர்கள் அதிக எச்சரிக் கையுடன் செயல்படுங்கள். பொது ஆர்ப்பாட்டங்கள் இலங்கை முழுவதும் நிகழலாம் - அவை வன்முறையாகவும் மாறலாம். ஆர்ப்பாட்டங்களால் பாதிக் கப்பட்ட பகுதிகளைத் தவிர்க்கவும். இலங்கையில் இறக்குமதி செய்யப்படும் சில உணவுகள் மற்றும் மருந்துகளுக்கு தட்டுப்பாடு நிலவுகிறது" என அவுஸ்தி ரேலிய அரசாங்கம் தெரிவித்துள்ளது.

மேலும், கிரெடிட் கார்ட் மோசடி, அதிக கட்டணம் மற்றும் போலி பொருட்கள் உள்ளிட்ட மோசடிகள் பொதுவாக இருக்கின்ற நிலையில் பாலியல் வன்கொடுமை, துன்புறுத்தல் மற்றும் கொள்ளை போன்ற குற்றங்களும் நிகழலாம் என்றும் அவுஸ்திரேலிய அரசாங்கம் எச்சரித்துள்ளது. (ஐ)

## தமிழர்...

வேகமாக தினந் தினம் மரபுரிமை ஆக்கிர மிப்புக்கள் நடைபெற்று வருகின்றது. இதனை எதிர்கொள்ள சரியான பொறிமுறை ஒன்று அனைத்து தமிழ் தரப்புக்களும் இணைவது அவசியமானது.

இதில் பல்கலைக்கழக சமூகத்தின் பங்களிப்பு புலமைசார் தளத்தில் அத்தியாவசியமானது. இதேபோன்று சட்ட ரீதியாக பிரச்னைகளை எதிர்கொள்ள சட்டவாளர்களின் பங்களிப்பு இப்போது போன்று தொடர்ந்து கிடைப் பதுடன் அது அனைத்து பிராந்திய மட்டத்திலும் ஒருங்கிணைத்த நிபுணத்து வத்துடன் இருப்பது மேலும் பலம் சேர்க்கும்.

தமிழ் தேசிய செயல்பாட்டாளர்கள் பல்கலை உள்ளிட்ட உயர் கல்வி மாணவர்கள் மேலும் வீச்சாக போராட்டங்களை மக்கள் சார்ந்தாக ஒழுங்கமைக்க வேண்டும்.

அரசியலாளர்கள் தொடர் அழுத்தத்தை அரசுக்கு வழங்குவதுடன் பாராளுமன்றை புறக்கணித்தல் உட்பட ஒத்துழையாமை இயக்கத்துக்கு தயாராக வேண்டும்.

சர்வதேச மற்றும் இந்திய அரசின் கவனத்தை மேலும் ஈர்த்து இந்தப் பெரும் பௌத்த மேலாண்மையை திணிக்கும், பூர்வீக தமிழர்களின் சிவ வழிபாட்டு இடங்களை மாற்றியமைக்கும் செயல்பாடுகளில் அரசுக்கு அழுத்தம் கொடுக்க அனைத்து தரப்பினரும் ஒட்டுமொத்தமாக எம்முள் இருக்கும் அனைத்து வேறுபாடுகளையும் களைந்து முன்வருவோம்.

அமைப்புசார் நிலையில் இயங்கும் நாம் அனைவரும் எம் அமைப்புக்களின் தனித்துவங்களை பேணும் அதே நேரம் எம் மக்களின் ஒட்டுமொத்த நலனுக்காக இருப்பை இந்தத் தீவில் நிலைநிறுத்தவதற்காக ஒருங்கிணைந்த கட்டமைப்பாக செயல்பட இந்த தீர்க்கமான தருணத்தில் அழைப்பு விடுகின்றோம்.

இதேநேரம், இந்த பிரச்னையை இதயசுத்தியோடு அணுகி அரசு தீர்க்க தவறின் இந்த தீவில் இனங்களிடையே சமாதான சகவாழ்வு தொடர்ந்து கேள்விகுறியாகி நாட்டின் எதிர்காலம் அதல பாதாளத்துக்கு செல்லும் என்பதை சுட்டிகாட்டுகின்றோம்

வடக்கு, கிழக்கு தமிழரின் தலைகளை களனிக்கு கொண்டு வருவேன் என பகிரங்கமாக கூறும் அளவுக்கு வந்துள்ள அரசியல்வாதிகளை கைது செய்து நடவடிக்கை எடுப்பதும் தமிழரின் வழிபாட்டுத்தலங்கள் தொடர்பாக மிக மோசமான கருத்துகளை வெளியிடுவோருக்கு எதிராக நடவடிக்கை எடுக்க அரசு உடனடியாக முன்வர வேண்டும்.

இவற்றை செய்யத் தவறின் தமிழர் நாம் தொடர் சாத்வீக போராட்டங்களுக்கும் ஒத்துழையாமை இயக்க முன்னெடுப்புகளுக்கும் தள்ளப்படுவோம் என இந்த சந்தரப்பத்தில் அரசாங்கத்தை கடுமையாக வலியுறுத்துகின்றோம் - என்றுள்ளது. (ஐ-3)

## சாவகச்சேரியில்...

உயர்தர வகுப்பில் கல்வி கற்று வரும் மாணவராவார்.

நுணாவில் வைரவர் கோயிலடியில் நேற்று முற்பகல் 11 மணியளவில் இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

மாட்டு வண்டி சவாரிக்காக வண்டில் மற்றும் மாடுகளை ஏற்றிச்சென்ற கொண்டிருந்த லொறியுடன் மோட்டார் சைக்கிள் நேருக்கு நேர் மோதியே இந்த விபத்து சம்பவித்தது.

விபத்து தொடர்பான மேலதிக விசாரணைகளை சாவகச்சேரி பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ஐ-03)

## தமிழர்களின்...

தொலைக்காட்சி ஒன்றில் மேர்வின் சில்வாவின் இந்த உரையின் ஒரு பகுதியை ஒளிபரப்பியது.

மேர்வின் சில்வா சர்ச்சைகளுக்கு பிரபலமானவர். ஊடக நிறுவனம் ஒன்றை தாக்கியமை, அரச ஊழியரை மரத்தில் கட்டி வைத்து அடித்தது, முன்னேஸ்வரம் ஆலயத்தில் வேள்வியை தடுத்தது என இவர் மீது பல குற்றச்சாட்டுகள் உள்ளன.

அரசியலில் இருந்து ஓரங்கட்டப்பட்டுள்ள மேர்வின் சில்வா, தற்போது தென்னிலங்கையில் சிங்கள - பௌத்த வாதக் கருத்துகள் மேலோங்கி வரும் நிலையில், இவ்வாறான சர்ச்சைக்குரிய கருத்தை வெளிப்படுத்தியுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

## 10ஆம்...

போதே அவர் இதனை தெரிவித்தார்.

இதன் மூலம் ஒரு வருடத்துக்கு முன்னதாகவே மாணவர்கள் பல்கலைக் கழகத்துக்குள் நுழையும் வாய்ப்பை பெறவுள்ளனர். தேசிய கல்வி நிறுவகம் மற்றும் கல்வி தொடர்பான நிபுணர்கள் அடங்கிய குழுவொன்றின் ஊடாக இது குறித்த ஆய்வு மேற்கொள்ளப்படவுள்ளது.

அதற்கமைய பத்தாம் தரத்தில் கல்வி பொதுத்தராதர பரீட்சையை நடத்துவதற்கு ஏதுவான வகையில் 6,7,8 மற்றும் 9ஆம் தரத்துக்கான பாடத்திட்டங்களை ஒழுங்கமைப்பது குறித்து இந்த நிபுணர் குழுவின் ஊடாக அவதானம் செலுத்தப்படும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (ஐ)

## வடக்கில்...

உள்ளது. இதற்கான ஒப்பந்தத்தில் இலங்கைக்கான ஜப்பானிய தூதுவர் கையெழுத்திட்டுள்ளார்.

இதேநேரம், இலங்கைக்கான ஜப்பானிய தூதுவர் மிசுகோஷி ஹிடேகி உள்ளிட்ட குழுவினர், கண்ணிவெடி அகற்றும் பணிகள் முன்னெடுக்கப்படும் யாழ்ப்பாணம் - கிலாலி பகுதிக்கும் வருகை தந்திருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

## கல்வியங்காட்டில்...

பொலிஸ் விசாரணையில் தெரிய வந்துள்ளது.

அவரின் உடலில் அடி காயங்கள் காணப்படுவதுடன், அவற்றில் இரத்தக் கசிவும் காணப்பட்டதாக பிரேத பரிசோதனை அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதனிடையே உயிரிழந்தவர் இதய நோயாளி என்பதால் அவர் மேலும் பாதிப்புக்கு உள்ளாகியிருக்கலாம் என்றும் கூறப்படுகின்றது.

இதனிடையே, கொலையானவரை சித்திர வதைக்கு உள்ளாக்கியவர்கள் அதனை தமது கைபேசிகளில் பதிவு செய்துமுள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

கொலையான நபர் நேற்று முன்தினம் சடலமாக அவரின் வீட்டில் காணப்பட்டார். அவரின் மனைவி, அளித்த முறைப்பாட்டின் அடிப்படையில் கோப்பாய் பொலிஸார் விசாரணைகளை தொடர்ந்து வருகின்றனர். (ஐ)

# டெங்கு கட்டுப்பாட்டு வாரம் வடக்கில் இன்று ஆரம்பமாகிறது!

யாழ்ப்பாணம், ஒக.14

அதிகரித்து வரும் டெங்கு நோயை கட்டுப்படுத்தும் நோக்கில் இன்று திங்கட்கிழமை முதல் வடக்கு மாகாணத்தில் டெங்கு கட்டுப்பாட்டு வாரம் ஆரம்பமாகி எதிர்வரும் 19ஆம் திகதி வரை கடைப்பிடிக்கப்படவுள்ளது.

இந்த நிகழ்வில் பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள், டெங்குத் தொண்டர்கள், சுகாதார உதவியாளர்கள், பொலிஸார் மற்றும் இராணுவத்தினர் இணைந்து களத்தரிசிப்பை மேற்கொள்ளவுள்ளனர்.

இதன்போது, வீடுகள், பாடசாலைகள், அரச, தனியார் நிறு வனங்கள், தொழிற்சாலைகள், ஆல யங்கள், பொது இடங்கள் மற்றும் கட்டட நிர்மாண பகுதிகள் தரிசிக்கப்படவுள்ளன.

இதேவேளை, யாழ்ப்பாணம் சுகாதார மருத்துவ அதிகாரி பணிமனைக்கு உட்பட்ட வண்ணார்பண்ணை பொதுச் சுகாதார பிரிவில் ஜே/ 100, ஜே/104 ஆகிய கிராம சேவையாளர் பகுதிகளில் இன்றையதினம் தரிசிக்கப்படவுள்ளதாக அப்பகுதி பொதுச்சுகாதார பரிசோதகர் ரி. கிருபன் தெரிவித்துள்ளார். (ஐ-ரி)

# இரத்தினக்கல் ஏற்றுமதி மூலம் அதிக வருமானம் ஈட்ட முடியும்!

கொழும்பு, ஒக. 14

இரத்தினக்கல் மற்றும் ஆபரண தொழில் சார் ஏற்றுமதி மற்றும் மீள் ஏற்றுமதியை மேம்படுத்துவதன் மூலம் வருடாந்தம் அதிக ஏற்றுமதி வருமானத்தை ஈட்ட முடியும் என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

இதேநேரம், அந்த இலக்கை அடைவதற்கான அடுத்த கட்ட நடவடிக்கைகள் மற்றும் திட்டங்களை உடனடியாக சமர்ப்பிக்குமாறு ஜனாதிபதி அதிகாரிகளுக்கு பணிப்புரை வழங்கியுள்ளார்.

இரத்தினக்கல் மற்றும் ஆபரணத் தொழில்துறை தொடர்பில் எழுந்துள்ள பிரச்னைகள் தொடர்பில் ஜனாதிபதி அலுவலகத்தில் அண்மையில் இடம்பெற்ற கலந்துரையாடலின் போது, அவர் இந்த விடயத்தை குறிப்பிட்டுள்ளார்.

இரத்தினக்கல் மற்றும் ஆபரணத் துறையின் அபிவிருத்திக்கான வரிக் கொள்கைகள் தொடர்பான பரிந்துரைகளும் "சூழல், இயற்கை வளங்கள் மற்றும் நிலையான அபிவிருத்திக்கான துறைசார் கண்காணிப்புக் குழு"வினால் ஜனாதிபதியிடம் சமர்ப்பிக்கப்பட்டது.

இரத்தினக்கல் மற்றும் ஆபரணத் துறையை பாதிக்கும் வரிகள் மற்றும் ஏற்றுமதி, மீள் ஏற்றுமதி செயன்முறைகள் தொடர்பில் இதன்போது விரிவாக கலந்துரையாடப்பட்டது.



இந்த துறையில் இதுவரை ஏற்பட்டுள்ள பிரச்சினைகள் தொடர்பிலும் உரிய தரப்பினர் ஜனாதிபதியிடம் தகவல்களை முன்வைத்தனர்.

இலங்கையின் இரத்தினக்கல் மற்றும் ஆபரணத் துறையின் வருமானம் கடந்த வருடத்துடன் ஒப்பிடும் போது 2023ஆம் ஆண்டு குறிப்பிடத்தக்க வளர்ச்சியை அடையவில்லை.

வருடாந்தம் குறைந்தது இரண்டு பில்லியன் அமெரிக்க டொலர்களை இலக்காகக் கொள்ளத் திட்டமிடப்பட்ட வேலைத்திட்டம் ஒன்று அமுல்படுத்தப்பட வேண்டும்.

இலங்கையில் இரத்தினக்கல் மற்றும் ஆபரண தொழிலை மேம்படுத்துவதற்கான முறையான வேலைத்திட்டம் உடனடியாக முன்வைக்கப்பட்டால் தேவையான வசதிகளை வழங்க அரசாங்கம் தயாராக இருப்பதாகவும் ஜனாதிபதி தெரிவித்தார்.

# மலையக மக்களின் நடைபவனி சரிசம வாழ்வுக்கான போராட்டம்!

## இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர்



கொழும்பு, ஒக. 14

தலைமன்னார் முதல் மாத்தளை வரையான நடைபவனி இலங்கையின் ஏனைய சமூகத்தினருடன் தாங்களும் சரிசமமாக வாழ்வதற்கான மலையக மக்களின் போராட்டத்தை நினைவு கூரும் விதத்தில் முன்னெடுக்கப்பட்டுள்ளது என்று இலங்கைக்கான அமெரிக்க தூதுவர் ஜூலி சங் தெரிவித்துள்ளார்.

அவர் தனது ருவிற்றர் பக்கத்திலேயே இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

"இலங்கையின் ஏனைய சமூகத்தினருடன் தாங்களும் சரிசமமாக வாழ்வதற்கான போராட்டத்தை நினைவுகூரும் விதத்தில் முன்னெடுக்கப்பட்ட இரண்டு வார நடைபவனி முடிவுக்கு வந்துள்ளது. 200 வருடங்களுக்கு முன்னர் மலையக தோட்டங்களில் வேலை பார்ப்பதற்காக வந்தவர்களை நினைவுகூரும் விதத்திலும் முன்னெடுக்கப்பட்ட நடைபயணத்தில் கலந்துகொண்டவர்களை நினைவில் நிறுத்துகிறேன்- என்றும் அந்தப் பதிவில் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார். (ஐ)

## 13ஐ வைத்து...

புதிய நிர்வாகத்தெரிவு அந்தக் கட்சியின் கிளிநொச்சி மாவட்ட பணிமனையில் நடந்தது.

இதில் பங்கேற்று பேசியபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

ரணில் விக்கிரமசிங்க தொடர்ந்தும் தாம் ஜனாதிபதியாகவருவதற்காக 13ஆம் திருத்தச்சட்டத்தை கொண்டு வருவதாக ஒரு மாயத் தோற்றத்தை ஏற்படுத்துகின்றார் அவர் அரசியல் தீர்வையும் பெற்றுத்தரமாட்டார் மக்களை ஒரு குழப்பத்தில் வைத்திருப்பார் - என்றார். (ஐ)

## இந்தியாவுக்கான...

செயலாளராக பணியாற்றியதுடன், நியூயோர்க்கில் உள்ள ஐக்கிய நாடுகள் சபையில் இலங்கையின் நிரந்தரப் பிரதிநிதியாகவும் ஐக்கிய இராச்சியத்தில் உயர்ஸ்தானிகராகவும் பின்னர் தாய்லாந்தில் உள்ள இலங்கைத் தூதுவராகவும் பணியாற்றி இருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

ஈழநாடு
Eelanadu

# 13ஐ விரிவுபடுத்துவதற்கு இது உகந்த தருணமல்ல!

## பொதுஜன பெரமுன சொல்கிறது

கொழும்பு, ஓக. 14

**13ஆவது திருத்தத்தை மேலும் விரிவாக்கம் செய்வதற்கு இது உரிய தருணமல்ல என சிறீலங்கா பொதுஜன பெரமுனவின் பொதுச்செயலாளர் சாகர காரியவசம் தெரிவித்துள்ளார்.**




13ஆவது திருத்தத்தை மேலும் விரிவாக்குவதற்கு இது பொருத்தமான தருணமில்லை என்ற நிலைப்பாட்டை எடுப்பதற்கு தீர்மானித்துள்ளதாகவும் அவர் கூறினார்.

கட்சியின் நிலைப்பாட்டை ஜனாதிபதியிடம் தெரியப்படுத்துவோம். முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுக்கு ஆதரவாக உள்ள பொதுஜன பெரமுனவின் பிரிவும் இந்த நிலைப்பாட்டை ஆதரித்துள்ளது.

பலவீனமான பொருளாதார நிலை காரணமாக அரசாங்கமே நெருக்கடியான நிலையில் உள்ள இந்த தருணத்தில் அரசாங்கம் 13ஆவது திருத்தத்தை விரிவாக்க இணங்கினால் அரசாங்கம் தேவையற்ற அழுத்தத்துக்கு உள்ளாகலாம்.

நாடு வலுவான பொருளாதார நிலையில் உள்ளவேளை 13ஆவது திருத்தத்தை விரிவாக்குவது குறித்து சிந்திக்கலாம் என்ற யோசனையை முன்வைக்கவுள்ளதாக அவர் குறிப்பிட்டார். (ஐ)

## சிறுமி வன்புணர்வு பெரிய தந்தை கைது!

யாழ்ப்பாணம், ஓக.

தனது வீட்டில் தங்கி இருந்த சிறுமியை வன்புணர்வு செய்த குற்றச்சாட்டில் அந்தச் சிறுமியின் பெரியப்பா கைது செய்யப்பட்டுள்ளார்.

வீட்டில் வறுமை காரணமாக 17 வயது மகளை சிறுமியின் தந்தை தனது மூத்த சகோதரனின் வீட்டில் தங்க வைத்திருந்தனர்.

இந்நிலையில், சிறுமியின் பெரிய தந்தை நீண்ட காலமாக சிறுமியை பாலியல் துஷ்பிரயோகத்துக்கு உள்ளாக்கி வந்துள்ளார். இது குறித்து சிறுமி தனது பெற்றோருக்கு தெரியப்படுத்தியதை அடுத்து, பெற்றோரால் ஊர்காவற்றுறை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டது.

முறைப்பாட்டின் பிரகாரம் விசாரணைகளை முன்னெடுத்த பொலிஸார், சிறுமியின் பெரிய தந்தையை கைது செய்துள்ளதுடன், சிறுமியை மருத்துவ பரிசோதனைக்கு உட்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளனர். (ஐ)

## கெஹலியவுக்கு எதிராக கையொப்பம் சேகரிப்பு!

கொழும்பு, ஓக. 14

சுகாதார அமைச்சர் கெஹலிய ரம்புக்வெலவுக்கு எதிராக கையெழுத்துகள் சேகரிக்கும் போராட்டம் நாவலப்பிட்டி வைத்தியசாலைக்கு முன்பாக நேற்று முன்னெடுக்கப்பட்டது.

அமைச்சருக்கு எதிராக ஐக்கிய மக்கள் சக்தியால் பாராளுமன்றத்தில் கொண்டுவரப்படவுள்ள நம்பிக்கையில்லா பிரேரணைக்கு ஆதரவு தெரிவிக்கும் வகையில் இந்த கையெழுத்து சேகரிப்பு போராட்டம் முன்னெடுக்கப்படுகின்றது.

10 ஆயிரம் கையெழுத்துகளுடன் சுகாதார அமைச்சர் நீக்குவதற்கான மனு சபாநாயகரிடம் கையளிக்கப்படவுள்ளது. (ஐ)

## உடவளவை நீர்த்தேக்கத்தின் நீர் 3 நாட்களுக்கே போதுமானது

கொழும்பு, ஓக. 14

உடவளவை நீர்த்தேக்கத்தின் நீர் கொள்ளளவு 3 நாட்களுக்கு மாத்திரமே போதுமானதென இலங்கை மகாவலி அதிகார சபை தெரிவித்துள்ளது.

தற்போது சுமார் 5 ஆயிரம் ஏக்கர் அடி நீர் கொள்ளளவு மாத்திரமே காணப்படுவதாக அதிகார சபை குறிப்பிட்டுள்ளது.

சமனல வாவியிலிருந்து உடவளவை நீர்த்தேக்கத்திற்கு நேற்று முன்தினம் 2 ஆயிரத்து 300 ஏக்கர் அடி நீர் திறந்து விடப்பட்டுள்ளது.

அதற்கமைய, நேற்றுமுன்தினம் பிற்பகல்வேளையில் இடது கால்வாய் ஊடாக மயூரபுர மற்றும் சூரியவெவ பகுதிகளுக்கு நீர் திறந்துவிடப்பட்டது.

தெற்கு கால்வாய் ஊடாக இன்று திங்கட்கிழமை அங்குனுகொலபெலஸ்ஸவுக்கு நீர் திறந்துவிடப்படும் என இலங்கை மகாவலி அதிகார சபை தெரிவித்துள்ளது. (ஐ)

## மதுபான போத்தல்களில் பாதுகாப்பு ஸ்ரிக்கர் கட்டாயம்!

கொழும்பு, ஓக. 14

எதிர்வரும் செப்ரெம்பர் 15 ஆம் திகதிக்குள் அனைத்து மதுபான போத்தல்களிலும் பாதுகாப்பு ஸ்ரிக்கர் ஒட்டுவதை கட்டாயமாக்குமாறு கலால் வரி திணைக்களத்துக்குப் பணிப்புரை விடுக்கப்பட்டுள்ளது.

வழிகள் மற்றும் வழிமுறைகள் தொடர்பான தெரிவுக்குழுவால் இந்த பணிப்புரை விடுக்கப்பட்டுள்ளது.

அதற்கமைய, எதிர்வரும் 15 ஆம் திகதிக்குள் அனைத்து தயாரிப்புகளிலும் பாதுகாப்பு ஸ்ரிக்கர் ஒட்டுவதை கட்டாயமாக்க உள்நாட்டு உற்பத்தி நிறுவனங்களுக்கு அறிவித்தல் விடுக்கப்பட்டுள்ளது. போலி மதுபான போத்தல்கள் சந்தைக்கு வருவதை தடுப்பதே இந்த திட்டத்தின் நோக்கமாகும்.

எவ்வாறாயினும், உள்நாட்டில் தயாரிக்கப்படும் பல மதுபான போத்தல்களில் இதுவரை பாதுகாப்பு ஸ்ரிக்கர்கள் ஒட்டப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

## ஓடிக்கொண்டிருந்த பேருந்தில் சிறுமிக்கு பாலியல் துன்புறுத்தல்

### எஸ். ரி. எவ். கான்ஸ்டபிள் உட்பட இருவர் கைது!

கொழும்பு, ஓக. 14

ஓடிக்கொண்டிருந்த தனியார் பேருந்தில் 16 வயது சிறுமியை பாலியல் துன்புறுத்தலுக்கு உள்ளாக்கிய விசேட அதிரடிப் படையை சேர்ந்த கான்ஸ்டபிள் ஒருவரும் முன்னாள் கடற்படை சிப்பாய் ஒருவருமாக இருவர் கைது செய்யப்பட்டனர் என்று ஜா-எல பொலிஸார் தெரிவித்தனர்.

கைது செய்யப்பட்ட பொலிஸ் விசேட அதிரடிப் படை கான்ஸ்டபிள் களுபோவில முகாமில் பணியாற்றுபவர். கடற்படை சிப்பாய் மாத்தளை பிரதேசத்தை சேர்ந்த 52 வயதானவர் என்று தெரிய வருகின்றது.

சந்தேகநபர்கள் இருவரிடமும் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ஐ)

## 6 ஆயிரம் யானைகளுக்கு தண்ணீர் பற்றாக்குறை

கொழும்பு, ஓக. 14

கடும் வறட்சி நிலவுவதா இராஜரட்டை, கிழக்கு, ஊவா மற்றும் தென் மாகாணங்களில் உள்ள வனவிலங்கு காப்பகங்கள் மற்றும் ஏனைய காடுகளில் 6 ஆயிரம் யானைகள் தண்ணீர் பற்றாக்குறையை எதிர்கொண்டுள்ளன என்று வனவிலங்கு பாதுகாப்பு மன்றத் தின் செயலாளர் நயனக ரன்வெல்ல தெரிவித்தார்.



இலங்கையில் வருடாந்தம் சுமார் 450 காட்டு யானைகள் உயிரிழக்கும் நிலையில் இது மற்றொரு பரிதாபகரமான நிலை என்று வனவிலங்கு பாதுகாப்பு மன்றத்தின் செயலாளர் நயனக ரன்வெல்ல மேலும் கூறினார்.

இதேநேரம், உடவளவை பூங்காவில் அமைந்துள்ள காடுகள் மற்றும் மகாவலி ஆற்றின் அனைத்துப் பகுதிகளிலும் நீர்ப் பற்றாக்குறை ஏற்பட்டுள்ளதாகவும், அது யானைகளுக்கு நேரடியாகப் பாதிப்பை ஏற்படுத்துகின்றன.

ஒவ்வொரு வருடமும் வறட்சி காலம் வருவதால், வனவிலங்கு திணைக்களம் வாழ்விடங்களை முகாமைத்துவம் செய்வதற்கும், மேய்ச்சல் நிலங்களை உருவாக்குவதற்கும், கிராமங்கள் மற்றும் வனப் பூங்காக்களை சுற்றி மின்சார வேலிகள் அமைப்பதற்கும் நடவடிக்கை எடுத்துள்ளதாக அகில இலங்கை வனவிலங்கு அதிகாரிகள் சங்கத்தின் தலைவர் பிரபாஷ் கருணாதிலக தெரிவித்துள்ளார்.

அரசியல் செல்வாக்கு, சில யானைகள் இடம்பெயர்ந்த பாதைகள் தடுக்கப்பட்டுள்ளன. அந்த இடங்கள் தடுக்கப்பட்டன அந்த இடங்களில் இருந்து யானைகள் கிராமங்களை தாக்கி விவசாயிகளுக்கு இடையூறு விளைவிப்பதாகவும் அவர்களின் உயிருக்கு ஆபத்து ஏற்படுவதாகவும் கூறுகிறார்.

யானைகள் நடமாட்டம் தொடர்பான பிரச்னைக்கு தீர்வு காணப்பட்டால், காட்டு யானைகளால் ஏற்படும் உயிரிழப்புகளையும், யானைகளால் மனிதர்களுக்கு ஏற்படும் சேதங்களையும் 90 வீதமளவில் குறைக்க முடியும் என்றும் அவர் தெரிவித்தார். (ஐ)

## அநுராதபுரம் - மிகிந்தலையில் இரட்டை ரயில் பாதை அமையும்

கொழும்பு, ஓக. 14

அநுராதபுரத்துக்கும் மிகிந்தலைக்கும் இடையில் இரட்டை ரயில் பாதை அமைக்க திட்டமிடப்பட்டுள்ளதாக போக்குவரத்து அமைச்சர் பந்துல குணவர்த்தன தெரிவித்துள்ளார்.

பொருட்களை கொண்டு செல்வதற்கான வாய்ப்புகளை வழங்கும் வகையில் இந்த புதிய பாதை அமைக்க திட்டமிடப்பட்டுள்ளதாக அமைச்சர் சுட்டிக்காட்டியுள்ளார்.

அபிவிருத்தி செய்யப்பட்ட கெக்கிராவை - தலாவை வீதியை மக்கள் பாவனைக்கு விடும் நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அமைச்சர் பந்துல குணவர்த்தன மேற்கண்டவாறு தெரிவித்தார்.

## விபத்தில் காயமடைந்த மூதாட்டி உயிரிழப்பு!

யாழ்ப்பாணம், ஓக. 14

வீதியை கடந்த வயோதிபப் பெண்ணை மோட்டார் சைக் கிள் மோதிய விபத்தில் படுகாய மடைந்து சிகிச்சை பெற்றுவந்த நிலையில் அவர் உயிரிழந்தார்.

யாழ்ப்பாணம் - பருத்தித் துறை வீதியில் கோப்பாய் தெற்கு பகுதியில் கடந்த 10ஆம் திகதி இந்த விபத்து இடம்பெற்றது.

விபத்தில் படுகாயமடைந்த மூதாட்டி யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த நிலையில் நேற்று முன்தினம் பிற்பகல் உயிரிழந்தார்.

கோப்பாய் தெற்கைச் சேர்ந்த நாகராஜா இராஜபூவதி (வயது 68) என்ற வயோதிப பெண்ணே இவ்வாறு உயிரிழந்தார். (ஐ)

## தடுப்பூசி பெற்றவர் மரணம் ஒவ்வாமையே காரணம்!

கொழும்பு, ஓக. 14

கம்பஹா மாவட்ட பொது மருத்துவமனையில் சிகிச்சை பெற்றுவந்த ஒருவரின் மரணத்துக்கு தடுப்பூசியால் ஏற்பட்ட ஒவ்வாமையே காரணம் என பிரேத பரிசோதனை அறிக்கையில் தெரியவந்துள்ளது.

கடந்த 11ஆம் திகதி குறித்த நோயாளி செப்டாசி டைம் என்ற தடுப்பூசியை பெற்றுக்கொண்ட நிலையிலேயே உயிரிழந்தார். நீரிழிவு நோயாளியான அவருக்கு வயது 67.

ஒரு காலில் காயம் ஏற்பட்ட நிலையில் கடந்த 6ஆம் திகதி மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட அவருக்கு அன்றைய தினம் முதல் 11ஆம் திகதி வரை பத்து தடவைகள் உரிய தடுப்பூசி போடப்பட்டது.

11ஆவது முறையாக தடுப்பூசி போடப்பட்டபோது, இந்த ஊசி போட்டப்பட்டு ஐந்து நிமிடங்களில் நோயாளி உயிரிழந்தார் என்று தெரிவிக்கப்பட்டது. இதையடுத்து, இந்த மருந்தை பாவனையிலிருந்து நிறுத்தி வைக்க மருத்துவமனை நிர்வாகம் முடிவு செய்திருந்தது.

உயிரிழந்தவரின் உடல் பாகங்கள் மேலதிக விசாரணைகளுக்காக மருத்துவ ஆராய்ச்சி திணைக்களத்துக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகவும் சுகாதார சேவைகள் பிரதி பணிப்பாளர் நாயகம் டாக்டர் விஜயசூரிய தெரிவித்துள்ளார்.

அதற்கு முன்னரும் மருந்து ஒவ்வாமை காரணமாக வைத்தியசாலைகளில் பல நோயாளிகள் உயிரிழந்தனர். இது தொடர்பில் ஆராய சுகாதார அமைச்சர் கெஹலிய ரம்புக்வெலவால் நிபுணர் குழுவொன்று நியமிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 14.08.2023 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.